பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

நல்லூர் [illegible] நூலகம்
யாழ்ப்பாணம்.

# வலம்புரி

Valampuri

[illegible] பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல துபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 02 ஞாயிற்றுக்கிழமை (19.10.2003) தொலைபேசி - 2223378 ஒலி 304

## முஸ்லிம்கள் தனித்தரப்பாக பேச முடியாது

# எமது வரைபை ஏற்றால் மட்டுமே சமாதானப் பேச்சு - கருணா

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபை அரசாங்கம் ஏற்றுக் கொண்டாலே சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்வர்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

நேற்றுத் தாயகம் திரும்பிய அவர், மட்டக்களப்பில் ஊடகவியலாளர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

எதிர்வரும் 26ம் திகதிக்குள் இடைக்கால நிர்வாகசபைத் திட்ட வரைபு நோர்வேத் தூதுவர் ஊடாக அரசாங்கத்திடம் கையளிக்கப்படும்.

திட்ட வரைபு கிடைத்ததும் அது குறித்து பேசுவோம் என அரசு கபடத்தனம் செய்ய முற்பட்டால், நாம் பேச்சில் கலந்து கொள்ள மாட்டோம். பதிலாக எமது திட்ட (10ம் பக்கம் பார்க்க)

## சுரண்டல் ரிக்கற் யாழ்.வாசிக்கு ரூ.10லட்சம்

(கந்தர்மடம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று விற்பனை செய்யப்பட்ட, தேசிய லொத்தர் சபையின் சுரண்டும் சுவீப்ரிக்கற்றுக்கு,யாழ்ப்பாணத்தைச் சேர்நத அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு 10 இலட்சம் பெறுமதியான புத்தம் புதிய கார் ஒன்று அதிர்ஷ்டப் பரிசாகக் கிடைத்துள்ளது.

சுரண்டும் சுவிப் ரிக்கற்றுக்கு யாழ்.குடாநாட்டில் முதன்முதலாக பெறுமதி வாய்ந்த கார் பரிசாகக் கிடைத்தமை இதுவே முதற்தடவை ஆகும். (இ-112)

# இடைக்கால சபைத் திட்டவரைபு பிரபாவிடம் நேற்று கையளிப்பு!

## இம்மாத இறுதிக்குள் அரசுக்குக் கிடைக்கும்

(கிளிநொச்சி)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் இறுதி வடிவம் கொடுக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபு நேற்றுப் பிற்பகல், விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனால் கையளிக்கப்பட்டது.**

**இத் திட்டவரைபு குறித்து, தலைவரும் தமிழ்ச்செல்வனும் நீண்ட நேரம் ஆராய்ந்து கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது.**

**திட்டவரைபு இம் மாத இறுதிக்குள் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும்.**

வடக்கு கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபிற்கான இறுதி நகலைப் பூர்த்தி செய்வதற்காக, ஸ்கண்டிநேவிய நாடுகளுக்கு விஜயம் செய்த தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர், நேற்றுத் தாயகம் திரும்பியதுடன், உடனடியாக தலைவர் பிரபாகரனைச் சந்தித்தனர்.

இச் சந்திப்பின் போது பூர்த்தி செய்யப்பட்ட இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைபை அவர்கள் தலைவரிடம் ஒப்படைத்தனர்.

சர்வதேச சட்ட வல்லுநர்களுடன் ஆராய்ந்து தீர்மானிக்கப்பட்ட திட்டவரைபு தலைவரின் பரிசீலனைக்காக அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இத் திட்ட வரைபு குறித்தும் அதன் அதிகாரங்கள், நடைமுறைகள் (10ம் பக்கம் பார்க்க)



## வெளிநாடு சென்ற புலிகள் நேற்று தாயகம் திரும்பினர்

(கிளிநொச்சி)

இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபு குறித்து ஆராய்வதற்காக ஸ்கண்டிநேய நாடுகளுக்கு விஜயம் செய்திருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்றுத் தாயகம் திரும்பியுள்ளனர்.

நேற்று அதிகாலை கொழும்பு கட்டுநாயக்கா. சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் அங்கிருந்த அரச வான் படைக்குச் சொந்தமான விசேட ஹெலிகொப்ரரில் கிளிநொச்சிப் பொது மைதானத்தை முற்பகல் 10.30 மணியளவில் வந்தடைந்தனர்.

இதேவேளை மட்டு அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி கேணல் கருணா மற்றொரு ஹெலிகொப்ரரில் மட்டக்களப்பு இலுப்பையடிச் சேனை மைதானத்தில் வந்திறங்கினார்.

இவர்களை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள், போராளிகள், மற்றும் பொது மக்கள் எனப் பெருந்திரளானோர் வரவேற்றனர். (இ)

## சமாதான முயற்சி குறித்து ஜனாதிபதியுடன் ஆலோசிக்க அரசு தயாராகவுள்ளது

### ஜனாதிபதியை சந்தித்த பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியுடனும், பொது ஜன ஐக்கிய முன்னணியுடனும் தற்போதைய சமாதான முயற்சிகள் பற்றி கலந்தாலோசிக்க தமது அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளதாக பிரதமர் தெரிவித்திருக்கிறார். கடந்த வியாழனன்று ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியும், பிரதமரும் சந்தித்து இரண்டு மணிநேரம் பேச்சுக்களை நடாத்திய போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அன்றைய பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடாத்தும் காலம், இடம், திகதி பற்றி முடிவு செய்யும் பேச்சுக்கள் முதலில் நடைபெற்ற பின்னர், சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளின் வடக்கு கிழக்கு இடைக் கால நிர்வாகத்திற்கான மாற்று யோசனைகள் இன்னும் இரு வாரங் (10ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் தலைமையில் மாபெரும் தேசிய முன்னணி

## ஐ.தே.முன்னணி உறுப்பினர்கள் பலர் ஆதரவாம்

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் 16 அன்று தம்மால் ஒழுங்கு செய்யப்படும் மாபெரும் எதிர்ப்பு கூட்டத்தில் வைத்து குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான ஐ.தே.முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணையவுள்ளதாக அக் கட்சியின் பேச்சாளர் மங்கள சமரவீர செய்தியாளர் மகாநாடொன்றில் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி சந்திரிகாவின் கீழ் மாபெரும் தேசிய முன்னணி ஒன்று ஐ.தே.முன்னணி உறுப்பினர்களின் ஆதரவுடன் உருவாக்கப்படஉள்ளது.

அடுத்த வருடத்திற்கான வரவு செலவு திட்ட விவாதம் இடம் பெறும் நாளன்று கொழும்பு காலி முகத்திடலில் நடைபெற ஏற்பாடாகியுள்ள மாபெரும் எதிர்ப்புப் பேராட்டத்தில் கலந்து கொள்ள நாடு முழுவதிலுமிருந்து சுமார்10 லட்சம் மக்கள் (10ம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத் தேர்தல் பிரதான கட்சிகள் மும்முரம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாண சபை தவிர்ந்த ஏனைய 7 மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்தும் பொருட்டு வேட்பாளர் தெரிவுகளை மேற்கொள்வதில் இரு பிரதான கட்சிகளும் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணிகளை மாவட்ட மட்டத்தில் ஆரம்பித்துள்ளது.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவுகளைத் நிறைவு செய்துள்ளது.

இதன் பொருட்டு 4 ஆயிரம் விண்ணப்பங்கள் கட்சியின் தலைமைக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக கட்சியின் செயலாளர் மைத்திரிபால ஸ்ரீசேன தெரிவித்துள்ளார். (த)

# மானிப்பாய் இந்துவை மாண்புறச் செய்த வித்தகச் செம்மல் வீரமணி ஐயர்

எங்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரித்தாய் எத்தனையோ கலைஞர்களை, கல்விமானகளை பெற்றெடுத்த பெருமைக்குரியது. கலைகளையும் கல்வியையும் வீரமணி ஐயாவுக்கு ஊட்டி வளர்த்து, தலை சிறந்த பல விருதுகள் சூட்டப் பெற்றபொழுது உவகையும் பெருமிதமும் கொண்ட இநதத் தாயுள்ளம் வீரமணி ஐயாவை இழந்த செய்தி கேட்டு கண்ணீர் வடிக்காமல் இரு முடியுமா?

**மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இன்று வீரமணி ஐயரின் நினைவு அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதனையொட்டி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

1947ஆம் ஆண்டில வி.வீரசிங்கம் அவர்கள் அதிபராக இருந்த பொழுது கல்வியிலும் சரி விளையாட்டுப் போட்டிகளிலும சரி பரிசுகளை இவர் பெற்றுக்கொண்டார். 15 வயது சிறுவனான இவர் மனோகரா நாடகத்தில் பெண் வேடம் தாங்கி அழகாக நடித்தார்.

அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மெய்மறந்து கரகோஷம் செய்கிறார்களா. அதிபர் வெள்ளிப் பதக்கம் ஒன்றினை அணிவித்து வாழ்த்துகிறார். அந்தச் சிறுவன வேறு யாரும் இல்லை. இன்று நாம் இழந்து நிற்கின்ற பிரம்மஸ்ரீ மகா வித்துவான் வீரமணி ஐயாவே.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்காக பல நாடகங்களையும், நாட்டிய நாடகங்களையும் தயாரித்து போட்டிகளில் முதல் பரிசுகளை பெற்றுக்கொடுத்த பெருந்தகை இவர்.



சிறந்த இசை, நாட்டிய மாணவர்களை உருவாக்கியதுடன் திருமுருகன் கீர்த்தனைகள் என்ற இசை நூலை ஆக்கி மானிப்பாய் இந்துக் கல்லூரி வெளியீடாக பேராதனை சர்வகலாசாலையில் பக்கவாத்தியம் சகிதம் அந்நூலை அரங்கேற்றினார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பவளவிழாவின் போது அரங்கேற்றிய ''கதை'' என்னும் கிராமிய காவிய நூல் பற்றி இன்றைக்கும் பேசப்படுகிறது.

கல்லூரிகளுக்கு அவர் ஆற்றிய தொண்டுகள் ஒருபுறம் இருக்க, இந்து சமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளையும் மீட்டுப்பார்க்க வேண்டும். இலங்கையிலுள்ள சுமார் எண்ணூறு கோவில்களுக்கு, திருவூஞ்சல் பிரபந்தங்களைப் பாடியும், நூற்றுக்கணக்கான கோவில்களுக்கு அந்தந்த மூர்த்திகளுக்கேற்ற வகையில் பாடல்களை இயற்றியும் கொடுத்துள்ளார். பாடல்களை அந்தந்த தேவஸ்தானங்கள் ஒலிப்பதிவு நாடாவாக வெளியிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ரி.எம்.சௌந்தரராஜன் அவர்களால் பாடப்பெற்ற ''கற்பகவல்லியின் பொற்பதங்கள்...'' என்ற பாடல் மயிலாப்பூர் தேவஸ்தானத்தில் கருங்கல்லிலே யாழ்ப்பாணத்து பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் என்று பொறிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக செந்தமிழும், சைவ நெறியும் தழைத்தோங்க, தித்திக்க தித்திக்க திருவாசகம் தந்த மாணிக்க வாசக பெருமானின் திவ்விய சரிதையை பிரமாண்டமான நாட்டிய நாடகமாக தயாரித்து பரதம் ஒரு பக்திக்கலை என்று தெளிவாக்கும் வகையில் மானிப்பாய மகளிர் கல்லூரியின் மாணவிகள் மற்றும் ஆசிரியைகளைக் கொண்டு சிவபக்தியை பரிணமிக்கச் செய்தார்.

**சுதுமலை. அ.நற்குணசேகரன்**

எங்கெல்லாம் தமிழர் செறிந்து வாழ்கிறார்களோ அங்கெல்லாம் இதனை மேடையேற்றி சிவபக்தியைச் சிறப்பித்தார்.

அவரின் கலைத் தொண்டை, இறைபணியைப் போற்றி அவர் விட்டுச் சென்ற இசை அமுதத்தை உலகெலாம் பரப்பச் செய்வோமாக.□

# கள்ளவாக்கு போடுவதை கண்டுபிடிக்க இயந்திரம்

## கண்டி மாணவன் சாதனை

(கண்டி)

நாட்டில் நடைபெறும் தேர்தல்களின் போது கள்ளவாக்குகள் போடுவதைத் தடுக்கும் வகையிலான நவீன ரக இயந்திரமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இயந்திரத்தை கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரி மாணவன் ஒருவனே உருவாக்கியுள்ளார். மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட ''சுயகரங்களால் புதிய உலகம்'' எனும் தலைப்பிலான கண்காட்சியில் வைப்பதற்காகவே இவ் இயந்திரம் தயாரிக்கப்பட்டது.

இவ் இயந்திரத்தில் சட்ட விரோதமாகத் தயாரிக்கப்பட்ட கள்ளவாக்குச் சீட்டுகள் போடப்படும் பட்சத்தில் அவற்றில் செல்லுபடியாகாத வாக்கென அடையாளத்தை பொறிக்கக் கூடிய வகையில் இது தயாரிக்கப்பட்டுள்ளதாகத தெரியவரும் இதே வேளை இந்த இயந்திரத்தைத் தயாரிக்க ஆயிரம் ரூபா மாத்திரமே செலவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-18)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மனிதவள அபிவிருத்தி கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் பட்டப் பின் கல்வி டிப்ளோமா தேர்வு (உள்வாரி) பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்குரிய பரீட்சார்த்திகளைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சி நெறியானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியிலும பெரதெனியப் பல்கலைக்கழகத்திலும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் அடுத்த மாதம் 25ம் திகதிக்கு முன்னதாக பரீடசை ஆணையாளர் நாயகம் தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை பரீட்சைத் திணைக்களம் பெலவத்தை பத்திர முல்லை எனும் முகவரிகக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படவேண்டும்.

# திருமுறைவிழா

(பொன்னாலை)

சங்கானை கல்விக்கோட்டம் நடாத்தும் சைவத்திருமுறைவிழாவும் சைவநெறித் தொண்டு செயல் நிகழ்ச்சிப் பரிசளிப்பு விழாவும் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை8 மணிக்கு சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

(ந)


பனை அபிவிருத்திச் சபையின்

## வெள்ளி விழாக் கண்காட்சி

பனை அபிவிருத்திச் சபை ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு இக் கண்காட்சி நடைபெறவுள்ளது

இடம் :- யாழ். மத்திய கல்லூரி

காலம் :- 20.10.2003 திங்கட்கிழமை

பிரதம விருந்தினர்

மாண்புமிகு அமைச்சர் தி.மகேஸ்வரன் (பா.உ)

(இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு)

21.10.2003 செவ்வாய்க்கிழமை

பிரதம விருந்தினர்

பேராசிரியர் சு.மோகனதாஸ்

(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

☺ பொலித்தீன் பாவனைக்கு மாற்றாக பனம் பொருளின் பாவனையை ஊக்குவிக்கும்முகமாக இக்கண்காட்சி இடம்பெறுகிறது.

☺ இக் கண்காட்சியில் அகில இலங்கை ரீதியிலான பனங் கைப்பணிப் போட்டியும், பனைவளம் பற்றிய கட்டுரைப் போட்டியும் நடைபெறுகின்றது.

☺ பனை வளம் சார்ந்த தொழில் துறைகளில் ஈடுபட்டோர்க்கும் மாணவ சமுதாயத்திற்கும் இக் கண்காட்சி பயனுள்ளதாகும்.

**பனை வளத்தை நம்பிவாழும் மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான பங்களிப்பு.**

**ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

53, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (C/6746)

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், பனை அபிவிருத்திச் சபை.


# திருட்டுச் சந்தேக நபர்களை இளைஞர்குழு மடக்கிப் பிடித்தது

சுன்னாகம் கிழக்குப் பகுதியில் நள்ளிரவில் நடமாடிய இருவர் திருட்டுச் சந்தேகத்தின் பேரில் அவ்வூர் இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேற்படி பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதையடுத்து அவ்வூர் இளைஞர்கள் இணைந்து இரவு நேரக் காவல் கடமையில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன் தினம் இரவு இப்பகுதி வீதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய மூவரை மேற்படி இளைஞர்குழு தடுத்து நிறுத்த முற்பட்ட போது அவர்கள் தப்பியோட முயன்றனர்.எனினும் இளைஞாகள் மேற்கொண்ட முயற்சியினால் அவர்களில் இருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

(உ)

## உங்கள் வலம்புரியின் வாரமலர்

விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சி நெறியானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியிலும பெரதெனியப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மொழி சித்தலுக்குமான சேவை பரீட்சைத் திணைக்களம் பெலவத்தை பத்திர முல்லை எனும் முகவரிகு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படவேண்டும்.

(உ-18)


# இதய அஞ்சலி



இசை உலகில்
அகல்
விளக்காய் விளங்கி
தமிழ் மண்ணுக்கு
பெரும் புகழ் சேர்த்த
எங்கள்
மஹா வித்துவான்

பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் M.A

அவர்களின் மறைவால் ஆழ்ந்த கவலையடைவதோடு அவருக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(அழகியல்) (A.D)
சங்கீத ஆசிரிய ஆலோசகர் (I.S.A)
(C/6756) தீவக வலய இசை ஆசிரியர்கள்

## உங்கள் வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்




பிரித்(து) ஓதுகிறர்
அஸ்கிரிய பீடாதிபதி

ஆனந்தராஜா மீது ஜனாதிபதிக்கு
ஏன் இந்தக் கோபம்?

தமிழரசுக்கட்சி மீண்டும் தழைக்குமா?

தமிழகத்தில் விபத்து
ஈழத்தமிழர் ஐவர் பலி

வியாசரின் பதில்கள்

பொன்.கணேசமூர்த்தியின்
கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

விலை ரூபா 14/-

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

## சிறு விளம்பரம்

### தேவை

வாகனத்தில் சென்று வியாபாரம் செய்யக்கூடிய விற்பனைப் பிரதிநிதி தேவை (ஆண்கள்) தொடர்பு: ஆசீர் வணிக நிலையம், 202A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

(C/6745)

### கும்பாபிஷேகம்

(சில்லாலை)

வேலணை விழாப்புலம் காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 22ம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (உ-58)

### உபதபாலகம் தரமுயர்வு

(வட்டுக்கோட்டை)

வங்காலையில் கடந்த 75 வருடங்களாக இயங்கிவரும் உபதபாலகம் கடந்த 9ஆம் திகதி முதல் தபாலகமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. (உ-89)

### திருமலையில் பொங்குதமிழ்

(திருகோணமலை)

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை உலகிற்கு ஒன்றுசேர எடுத்துரைக்கும் பொங்குதமிழ் எழுச்சிவிழா எதிர்வரும் ஜனவரிமாதமளவில் திருகோணமலையில் நடத்தப்படவுள்ளதாக அம்மாவட்ட பொங்குதமிழ் ஏற்பாட்டாளர்கள் குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஏற்கனவே யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் பொங்குதமிழ் நிகழ்வு மிக எழுச்சிபூர்வமாக நடத்தப்பட்டமை தெரிந்ததே. (உ-64,10)

### தெரிவுப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் கனிஷ்ட கூடைப்பந்தாட்ட வீரர்களுக்கான தெரிவுப் பயிற்சி இன்று மாலை 4.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெறவுள்ளது. (உ-10)

# பிறந்த நாளின் பலன்களை அறிந்து உங்கள் வாழ்வை இன்பமாக்குங்கள்

## சோதிடபலன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### பிறந்தநாள் பலன்

**ஆகஸ்ட் 21 ஆம் திகதியிலிருந்து செப்ரெம்பர் 20 ஆம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான பலன்கள்.**

இந்த மாதத்தில் பிறந்தவர்கள் பொதுவாக வாழ்க்கையில் வெற்றியுடையவர்களாக இருப்பார்கள். மூளையுள்ளவர்களாகவும், தமக்கு ஏற்றவர்களுடன் மட்டுமே பழகுபவர்களாகவும் இருப்பார்கள். எப்படிப்பட்ட தொழிலும் சிறந்த ஒரு முடிவுக்கு வந்து முன்னுக்கு வருவார்கள். மற்றவர்கள் சொல்லுவதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏமாறவும் மாட்டார்கள்.

வாழ்க்கையில் தாம் எண்ணுபவற்றைச் செய்து முடிக்கவேண்டும் என்று எண்ணுவார்கள். தம்மை மற்றவர்கள் நிலையில் வைத்துப் பார்த்து, ஒவ்வொரு செயலுக்கும் தகுந்த காரணத்துடன் ஒரு முடிவுக்கு வருவார்கள்.

#### நினைவாற்றல்

சிறந்த எழுத்தாளர்களாகவும், எப்படிப்பட்ட குறைகளையும் எளிதில் கண்டுபிடிக்கும் தன்மையுடையவர்களாகவும், விபரமாகப் படித்து எதையும் நினைவில் கொள்ளுபவர்களாகவும் இவர்கள் இருப்பார்கள்.

சுற்றுப்புறம் மிகவும் அழகுடனும் நாகரிகமாகவும், இருக்கவேண்டும் என்று இவர்கள் எண்ணுவார்கள். வீடு, உடைகள் ஆகியவற்றில் அதிகமாகக் கவனம் செலுத்துவார்கள். இவர்கள் தேர்ந்தெடுக்கும் பொருள்கள் சிறந்தவையாகவும், அழகாகவும் இருக்கவேண்டும் என்று கருதுவார்கள்.

இவர்கள் மற்றவர்கள் விட்டுவிட்ட பணிகளை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால், இவர்கள் கவனம் செலுத்தும் செயல்கள் எதுவாக இருந்தாலும், அவற்றை வெற்றியுடன் செய்து முடிப்பார்கள்.

எப்போதும் தமது தோற்றம் மிக்க கவர்ச்சியாக இருக்கவேண்டும் என்று எண்ணுவார்கள். பதவியில் உள்ளவர்களிடமும், பெரிய மனிதர்களிடமும் நல்ல மதிப்புடன் நடந்துகொளளுவார்கள். சட்டங்களுக்கு உட்பட்டு, சட்ட வழிகளின் படியே எதையும் செய்வார்கள்.

இவர்கள் சிறந்த வழக்கறிஞர்களாகவும், இலக்கியவாதிகளாகவும் இருக்கவும், சொற்போர் புரிபவர்களாக இருக்கவும் வழி உண்டு. ஆனால், புதிதாக ஒன்றும் சொல்லாமல், நடந்தவற்றை மட்டுமே உதாரணமாகக் காட்டுவார்கள்.

#### தொழிலில் ஆர்வம்

ஒரே நிலையான, உழைப்பினால் மட்டுமே இவர்கள் பெரும் வெற்றியை அடைந்து வருவார்கள்.

இவர்கள் தங்கள் சொந்த எண்ணங்களிலும் சொந்த நலன்களிலும் மட்டுமே எப்போதும் நேரத்தைக் கழிப்பார்கள். இவர்கள் எண்ணியவற்றை அடைவதற்காகச் சற்றுச் சுயநலமாக நடந்துகொள்ளவும் தயங்கமாட்டார்கள்.

எப்போதும் இவர்கள் தன்னம்பிக்கையும், பணவசதியும் கொண்டவர்களாக இருப்பார்கள்.

நலலதையோ, தீயதையோ செய்ய முடிவைக் கட்டிவிட்டால், கடைசி வரையில் ஒருகை பார்த்துவிடுவார்கள். பணத்தில் ஆசை பிறந்துவிட்டால், எதற்கும் தயங்க மாட்டார்கள். மற்றவர்களைப் பற்றி, இவர்கள் துன்பம் கொள்ளாமல், தாம் எண்ணியபடி பணத்தை எப்படியாவது அடையவேண்டும் என்று எண்ணுவார்கள்.

வாழ்க்கையில் எப்படிப்பட்ட பாதையையும் இவர்களால் ஏற்றுக்கொள்ள முடியும்.

இவர்களுடைய அன்பைப் பொறுத்தவரையில், இவர்களை எளிதில் புரிந்துகொள்ளவே முடியாது. ஆண்களிலும் சரி, பெண்களிலும் சரி, அன்புகாட்டுவதில் சிறந்தவர்களாகவும் இருப்பார்கள், மிக மோசமானவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்கள் கற்புள்ளவர்களாகவும், தூய்மையுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

ஆனால், இவர்கள், பிறகு மாறினால், முற்றிலும் மாறி, ஏதோ ஒரு வஞ்சத்துடன் தூய்மையை இழக்க யோசிக்கமாட்டார்கள். ஆனால், தமது புத்திசாலித்தனத்தாலும், சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டும் என்ற எண்ணத்தாலும், இவர்கள் தங்களுடைய குறைகளை மற்றவர்கள் அறியாவண்ணம் மறைத்து விடுவார்கள். ஆண்கள் மது அருந்தும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள அதிக வாய்ப்புண்டு

#### உடல்நிலை

ஏனைய மாதங்களில் பிறந்தவர்களை விட இந்த மாதத்தில் பிறந்தவர்கள் கூடியவரையில் நோயின்றியே வாழ்வார்கள். ஆனால், இவர்கள் பத்திரிகைகளிலோ, புத்தகங்களிலோ, ஏதாவது ஒரு நோயைப் பற்றிப் படித்துவிட்டால், உடனே அந்த நோய் தமக்கு வந்துவிட்டதாகக் கற்பனை செய்துகொள்ளுவார்கள்.

உணவு வகைகள் மிக ருசியுடன் இருக்கவேண்டும். சுவையுடனும், பார்ப்பதற்கு அழகுடனும் இருந்தால்தான் இவர்கள் உணவு உண்பார்கள். அதனால், நல்ல உடல் நலம் காப்பவர்கள் இவர்கள் எனலாம்.

சுற்றுப்புறத்தில் இவர்கள் மிகுந்த கவனம் செலுத்துவார்கள். சிறிய கேடுகளும் இவர்களுடைய நரம்புகளைப் பாதித்து, ஜீரண உறுப்புகளைப் பாதிக்கும்.

குடல் பாதிக்கப்பட்டு, அடிக்கடி மலச்சிக்கல் சீதபேதி போன்ற நோய்களால் துன்பம் கொள்ளுவார்கள்.

உப்புசங்கள், தோற்பட்டைகள் இவற்றைப் பாதிக்கும் நோய்கள் இவர்களுக்கு வரவாய்ப்புண்டு.

இந்த மாதத்தில் பிறந்தவர்களுக்கு மிகுந்த அளவில் சூரிய வெளிச்சம் மிகத் தேவை. நல்ல காற்றும் தேவை.

சுற்றுப்புறம் அமைதியுடன் இருந்தால் தான் இவர்களால் அமைதியுடன் வாழமுடியும். உடல் துன்பத்தை இவர்களால் தாங்கிக்கொள்ளவே முடியாது.

உடல் எப்போதாவது பாதிக்கப்பட்டால், திறந்த வெளிகளிலோ, கிராமங்களிலோ சில நாட்கள் தங்கினால் நல்லது.

எப்போதும் இவர்கள் இளமை மாறாமல், வயதில் ஏற்றத்தை வெளிப்படுத்தாமல் தோற்றமளிப்பார்கள்.

மண வாழ்க்கையில் தோல்வியுற்றால், அதைத் தொடர்ந்து நோய்கள் இவர்களைப் பாதிக்கும்.

இவர்களுக்குப் பிடித்த நிறங்களாவன:- மிக மங்கிய வண்ணங்கள் எதுவும் இவர்களுக்குப் பிடிக்கும், வெள்ளியைப் போன்ற நிறமும் பிடிக்கும் (தொடரும்)

# இந்திய அணிக்கு எதிராக நியூஸிலாந்து புதிய சாதனை

மொகாலியில் தற்போது நடைபெற்றுவரும் இந்திய மற்றும் நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிவரும் நியூஸிலாந்து அணி இரண்டாம்நாள் ஆட்டநேர முடிவின்போது 5விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 536 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில், மார்க்றிச்சேட்சன் 145 ஓட்டங்களையும், ஸ்கொட் ஸ்சைரீஸ் 119 ஓட்டங்களையும், லூவின்சன் 106 ஓட்டங்களையும், நியூஸிலாந்து அணி சார்பாகப் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

நியூஸிலாந்து அணி சார்பில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்த 3 வீரர்களும் சதம் பெற்றிருப்பது டெஸ்ட்கிரிக்கெட் வரலாற்றில் நியூஸிலாந்து அணி இந்திய அணிக்கெதிராக நிகழ்த்திய புதிய சாதனையாகக் கருதப்படுகின்றது.

மேலும், டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் துடுப்பாட்டத்தில் முதல் 3 வீரரும் சதம் பெற்றிருப்பது இது 7ஆவது சந்தர்ப்பம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்திய அணிக்கெதிராக ஒரு இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி பெற்றுக்கொண்டுள்ள அதி கூடிய ஓட்டமாக 536 ஓட்டங்கள் பதிவாகியுள்ளது.

இதற்கு முன்னர் 1967-68 கிரிக்கெற் பருவகாலத்தில் கிறைஸ்சேர்ஸ்சில் நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது நியூஸிலாந்து அணி இந்திய அணிக்கெதிராக 502 ஓட்டங்களை ஒரு இன்னிங்ஸில் பெற்றிருந்தமையே அதிகபட்ச இந்திய அணிக்கெதிரான ஓட்டமாகக் கருதப்பட்டு வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)



மொகாலியில் நடைபெற்ற இந்தியாவுக்கும் நியூஸிலாந்துக்கும் இடையிலான முதல் டெஸ்டில் இரண்டு இன்னிங்ஸ"களிலும் மிகச் சிறப்பாக ஆடிய கிரெய்க் மெக்மில்லன்.

# மும்முனை ஒருநாள் போட்டி இந்திய அணி விவரம் அறிவிப்பு

ஆஸ்திரேலிய, இந்திய, நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான மும்முனை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டித் தொடருக்கான இந்திய அணியின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மும்முனைப் போட்டிகள் இம்மாதம் 23ம் திகதி முதல் இந்தியாவில் இடம் பெறவுள்ளன. இதில் மீண்டும் இந்திய அணியின் டெஸ்ட் வீரராக இடம்பிடித்துள்ள வீ.வீ.எஸ்.லக்ஷ்மனும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

மேலும், தமிழ் நாட்டைச் சேர்ந்த மற்றுமொரு வீரரான முரளிகார்த்திக்கும் இவ் மும்முனை ஒரு நாள் சர்வதேச போட்டித் தொடருக்கான இந்திய அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இதன்படி இம் மும்முனை ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டித் தொடருக்கான ஏனைய இந்திய அணி வீரர்களாக செளரவ் கங்குலி (அணித்தலைவர்) வீரந்தர் ஷேவாக், சச்சின் டெண்டுல்கர், ராகுல ராவிட், யுவராஜ் சிங், மொகமட ஹைவு பார்த்திப் பட்டேல், அஜித் அஹாார்கர், ஹர்பஜன் சிங், ஸகீர்க்கான், அனில் கும்ளே, ஹவாஸ்கர் சாஷால்வி ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இப்போட்டித் தொடரின் முதலாவது போட்டி இம்மாதம் 23ஆம் திகதி சென்னையில் உள்ள சேப்பாக்கம் விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளது. இதில் நியூஸிலாந்து அணியை இந்திய அணி எதிர்கொள்ளவுள்ளது. (உ-68)

## விளையாட்டுச் செய்திகள்

# 91 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் பங்களாதேஷ் அணி

பங்களாதேஷ் 'ஏ' அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் நடைபெற்றுவரும் 3நாள் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின்போது பங்களாதேஷ் 'ஏ' அணி அதன் இரண்டாவது இனிங்ஸிற்காக விக்கெட் இழப்பின்றி 6 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 'ஏ' அணி அதன் முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி அதன் முதல் இன்னிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 333 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதன்படி பங்களாதேஷ் 'ஏ' அணி இனிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 91 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தனது 2ஆவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வருகின்றது.(உ-68)

# சாங்ஸ்தா வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பாடசாலைகளின் உதைபந்தாட்ட சங்கம் நடாத்தும் "சங்ஸ்தா" வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினர்களுக்கிடையில் நடாத்தப்படவுள்ளது.

இதற்கான யாழ். மாவட்டத் தெரிவுப் போட்டிகள் எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்படவுள்ளன. இவற்றுக்கான அணித்தெரிவு நாளை திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலந்துகொள்ள விரும்பும் பாடசாலை அணிகள் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிப்பதுடன், வீரர்களுக்கான இலங்கைப் பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சங்கத்தின் அடையாள அட்டையையும் பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும், இவற்றுக்கான படிவங்களையும், விதிகளையும் இப்போட்டியின் இணைப்பாளர் வீ.எஸ.மகேந்திரனிடம் யாழ். மத்திய கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்படும் ஒரு அணி மட்டுமே அகில இலங்கைப் போட்டியில் பங்குபெறத் தகுதிபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-18)

## திருமலை எண்ணெய்க்குத விவகாரம்

# இந்திய வெளிவிவகார அமைச்சர் மீது லக்ஷ்மன் கதிர்காமர் கடும் அதிருப்தி





(கொழும்பு)

**இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்க மீது கடும் அதிருப்தி வெளியிட்டுள்ள முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர், திருகோணமலைத் துறைமுகத்தில் உள்ள இந்திய எண்ணெய்க் குதங்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளால் பெரும் ஆபத்து உள்ளது என்பதை இந்தியா இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை என கவலை தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

திருகோணமலையில் உள்ள இந்திய எண்ணெய்க் குதங்களுக்கு தமிழீழவிடுதலைப்புலிகளால் ஆபத்து இல்லை என இந்திய வெளி விவகார அமைச்சர் ஜஸ்வந் சிங்க, கடந்த புதனன்று கொழும்பில் இடம பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கூறியிருப்பது குறித்து, இந்தியத் தூதுவர் நிருபம் சென்னிடமும் விளக்கம் கோரியிருந்தேன்.ள அவரும் அமைச்சர் ஜஸ்வந்சிங்கவின் இக்கருத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

திருகோணமலைத்துறைமுகத்தில் உள்ள எண்ணெய்க் குதங்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதை கடந்த ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தின் போது பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன உறுதிப் படுத்தியிருப்பதுடன், அதனை எதிர் கொள்ள அரசு தயாராக இருப்பதாக கூறியதை எவரும் மறுக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை. திருகோணமலைத் துறைமுகத்தில் உள்ள எண்ணெய்க்குதங்களுக்கு விடுதலைப்புலிகளால் ஆபத்துள்ளதாக அடிக்கடி கூறிவரும் லக்ஷ்மன் கதிர்காமருக்கு, இந்திய வெளிவிவகார அமைச்சரின் இத்தகைய மறுப்பு பெரும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரச வட்டாரங்கள் கருத்துத்தெரிவித்துள்ளன.

இதற்கிடையில், திருகோணமல்லைத துறைமுகத்தில் உள்ள இந்திய எண்ணெய்க் குதங்களுக்கு புலிகளால் ஆபத்து இல்லை என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஒரு போதும் கூறவில்லையெனவும், இது சில ஊடகங்களினால் திரிவுபடுத்தி வெளியிடப்பட்ட செய்தி ஒன்றும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட் டில் ,தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதமிருக்க,இந்திய அரசாங்கத்திற்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையிலான நெருங்கிவரும் உறவுகளுக்கு இந்த முரண்பட்ட கருத்துப் பரிமாற்றம் பங்கம் விளைவிக்கும் நடவடிக்கையாகவே அமையுமென அரசியல் ஆய்வாளர்கள் ஆருடம வெளியிட்டுள்ளனர்.

(உ-63,10)

## உயர் பாதுகாப்பு வலயங்களில்

# மக்களை மீளக் குடியமர்த்துவது பற்றி கூட்டமைப்பினர் மீண்டும் பேச்சு

(கொழும்பு)

இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், அமைச்சர்களான மிலிந்த மொறகொட திலக்மாரப்பன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாணடோ ஆகியோருக்கும் இடையிலான உயர் மட்டச் சந்திப்பொன்று இன்னும் ஒரு சில தினங்களில் கொழும்பில் இடம் பெறவுள்ளது.

மேற்படி சந்திப்பின் போது உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக முழுமையான ஆய்வொன்றினை மேற்கொண்டு அதுபற்றி விபரமான அறிக்கை ஒன்று தயாரிப்பது பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்தப்படவுள்ளது.

அதன் பின்னர் பூரணமாக தயாரிக்கப்பட்ட அவ் அறிக்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன், பின்பு உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக் குடியேறுவது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமனற உறுப்பினர்கள் கடந்த வியாழனன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச சந்தித்து இது வட்யம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்திய போதே மேற்படி தீர்மானம் எடுக்கப் பட்டுளளமை குறிப்பிடத்தக்கது.

(உ-18)

# பிரதமர் ரணில் இன்று இந்தியா பயணமாகிறார்

(கொழும்பு)

இந்தியாவிற்கான உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரம சிங்க இன்று அங்கு பயணமாகவுள்ளார்.

இவ் விஜயத்தின்போது அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் குறித்து இந்திய உயர் மட்ட அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறவுள்ளார்.



அத்துடன், நாட்டில் சமகால நிலைமைகள், இலங்கை- இந்திய இராஜதந்திர உறவுகள் குறித்து இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜபாயுடன இவ்வார நடுப்பகுதியில் புதுடில்லியில் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந் சிங்க தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## கவிமாமணிக்குக் கண்ணீர் அஞ்சலி

**1982 ஆம் ஆண்டில் வட இலங்கைச் சங்கீத சபையின் பொன்விழாவின்போது ''கவிமாமணி''என்னும் பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட்ட முதுபெரும்**



*இயல், இசை, நடனக் கலைஞர்*

**சிவஸ்ரீ ந.வீரமணி ஐயர் (M.A)**

**அவர்களின் மறைவு குறித்து சபை அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றது. அன்னாரே சபைக் கீதத்தை யாத்துதவியவர். அவர் இச்சபையின் முதுசம். அன்னாரின் சேவையை இழந்த சபையினரும், இசை, நடன ஆர்வலர்களும் இணைந்து அவரது ஆத்மா பரராசசேகரப் பிள்ளையார் திருவடி சேரப் பிரார்த்திக்கின்றோம்.**

*வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.*

**வட இலங்கை சங்கீதசபை, யாழ்ப்பாணம்.**

(C/6753)

# தேசிய அடையாள அட்டையை விரைந்து பெற இலகு நடைமுறை

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வரும் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதில் புதிய நடைமுறைகளஅமுல படுத்தப்படவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் கே. ஜே. விஜயரணசிங்க தெரிவித்துள்ளார்.

அடையாளஅட்டைக்கு இது வரை காலமும் விண்ணப்பிப்பதற்கு கிராம அலுவலர்கள் அத்தாட்சிப் படுத்துவது போன்று இனி, இராணுவம் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள், நீதவான்கள் சட்டத்தரணிகள் ஆகியோரும் அத்தாட்சிப்படுத்தி உறுதிசெய்யக்கூடிய வகையில் உள்துறை அமைச்சின் செயலாளர் எம். என்.ஜுனைட்டின் ஆலோசனையின் பிரகாரம் இப் புதிய நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளது.

இதன்படி கிராம அலுவலர்களிடம் இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தியாக்கி மேற்குறிப்பிட்ட தரப்பினரிடம் உறுதிப்படுத்தி ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு பதிவுத் தபால் மூலம் அவ்விண்ணப்பங்களை அனுப்பி அடையாளஅட்டைகளை பெற்றுக் கொள்ளமுடியும்.

இதனடிப்படையில் விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்பங்கள் ஒப்படைக்கப்பட்டு 20 நாட்களுக்குள் அடையாள அட்டை கிடைக்கப்பெறும். அத்துடன், ஒரேநாளில் அட்டைகளை பெறவேண்டுமாயின் 500 ரூபாவை செலுத்தி பிரதான அலுவலகத்திலேயே அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரங்கள் இம்மாத இறுதிக்குள் அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-18)

## பரிசளிப்புவிழா

(அளவெட்டி)

அளவெட்டி அருணோதயக் கல்லூரியின வருடாந்த பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் கி. மகேந்திரராஜாவின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில்,பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழைக்கோட்ட உதவிப் பணிப்பாளர் கா.சந்திரபாலன்,யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கை. கவியன்பன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். உ-83)

## தீவக மாணவர் நலன் கருதி

# 20 இலட்சம் செலவில் விடுதி

## தீவக கல்விப் பணிப்பாளர் தகவல்

(குப்பிளான்)

தீவகக் கல்வி வலயத்தில் உள்ள சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயத்தில் 20 இலட்ச ரூபா செலவில் மாணவர்கள் தங்கி நின்று கற்பதற்கு வசதியாக விடுதி அமைக்கப்பட்டு வருகிறது என்று தீவக கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் பி.வேணுகோபால் தெரிவித்துள்ளார். அனலைதீவு அபிவிருத்தி இளைஞர் கழகத்தினால் நடாத்தப்பட்ட பரிசளிப்பு விழாவிலும் கலை விழாவிலும பிரதம விருத்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

பே. குகநேசர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மேலும் கூறுகையில், தனித்தீவுகளான அனலைதீவு, எழுவை தீவு போன்ற கிராமங்களில் உயர் கல்வி கற்பதற்கு போதிய வசதிகள் இல்லை.இதனால் மாணவர்கள் யாழ். நகருக்கு சென்றே கல்வி கற்கின்றனர். இந் நிலையை மாற்றி தீவகத்திலேயே சகல வசதிகளுடனும் மாணவர்கள் கற்பதற்கு ஏற்ற முறையிலேயே விடுதி கட்டப்படுகிறது.

இவ் ஊர் மாணவர்கள் அதிபர், ஆசிரியர்களுக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டும். நான் இப்பாடசாலையில் கல்விகற்றே கல்விப் பணிப்பாளராக வந்துள்ளேன். எனவே, நீங்களும் கல்வி கற்று உயர் பதவிகளைப் பெறவேண்டும் என்றார்.

(உ-20)


# அஞ்சா நெஞ்சுரத்தோடு துஞ்சாதுழைத்த சிங்கம் வஞ்சகத்தனத்திற்கு இரையானதோ?

**பத்திரிகையாளர் நிமலராஜன் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சிபெற்று தமிழ், சிங்கள பத்திரிகைகள் - வானொலி போன்ற ஊடகங்களுக்கு ஒரே நேரத்தில் பணியாற்றக்கூடிய வல்லமை மிக்கவராக விளங்கினார்.**

**அரசியல் வார ஏடாகிய ''ராவய'' பத்திரிகையிலும், சூரியன் எவ்.எம். தமிழ் சேவையிலும், பி.பி.ஸியின் சிங்கள, தமிழ் சேவைகளிலும், ஐ.பி.ஸி. போன்ற சர்வதேச சேவைகளிலும் இவர் சேவையாற்றியுள்ளார். வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளராகவும் செயற்பட்டார். இவரின் மூன்றாம் ஆண்டின் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.**

நிமலராஜனைப்போல் முரசொலிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திருச்செல்வத்தால் பத்திரிகைத் துறையில் புடம் போடப்பட்டவர்களில் நானும் ஒருவன். எனது வாழ்வில் மறக்கமுடியாத இரு மரணங்களில் நிமலராஜனின் மரணமும் ஒன்று. முதலாவது மரணம் திரு. திருச்செல்வம் அவர்களின் ஒரே புதல்வன் அகிலனின் மரணம். அதுவரையும் பத்திரிகை உலகம் என்பது வெறும் ஒரு பொழுதுபோக்கான ஒரு தொழில் என்று மட்டுமே நினைத்திருந்த எங்களுக்கு அதன் ஆபத்தை உணரவைத்தது அகிலனின் மரணம். ஆயுத பாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டபோது அவரின் அன்புத் தந்தை திருச்செல்வம் முரசொலிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பணிபுரிந்தார். அவர்களின் கீழ் நாங்கள் 5 இளைஞர்கள் ஆசிரிய பீடத்தில் பணிபுரிந்தோம். பணிபுரிந்தோம் என்பதைவிட விளையாடித் திரிந்தோம் என்பதே உண்மை. எங்களில் ஒருவர் மட்டுமே அப்போது திருமணம் முடித்திருந்தார். நிமலராஜன் அவர்கள் அப்போது விளம்பரப் பிரிவிலும், விநியோகப் பிரிவிலும் பணிபுரிந்தார். செய்திகளில் அவர் கொண்ட ஆர்வம் காரணமாக அவர் எம்மோடு தமது நேரத்தைச் செலவிட்டார். இதனால், அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அதனால் ஒரு நல்ல நண்பன் எனக்குக் கிடைத்தான். யாழ்ப்பாணத்தில் பத்திரிகை ஒன்றில் ஆசிரியராக இருப்பது என்பது மிகவும் இலகுவான காரியம் அல்ல. கொழும்பு மற்றும் வெளிநாடுகளில் உள்ள பத்திரிகை நிர்வாகம் போல யாழ்ப்பாணப் பத்திரிகை நிர்வாகம் வெளித்தொடர்பு, ஆசிரியபீடம், அச்சகப் பிரிவு என்பன சகலமும் ஆசிரியரின் கண்காணிப்பிலேயே யாழ்ப்பாணத்தில் இயங்கும். பத்திரிகையில் எங்கோ ஒரு மூலையில் வரும், யாரோ ஒரு நிருபரின் செய்திக்கு

கைத் தொழிலை ஒரு பொழுது போக்காக ஒரு விளையாட்டு வீரன் எப்படி விளையாடிக்கொண்டு பணம்



பண்ண முடியுமோ அவ்வாறு அனுபவித்துக்கொண்டிருந்தோம். அப்போதுதான் அந்த அதிர்ச்சிகரமான சம்பவம் நடைபெற்றது.

எமது பிரதம ஆசிரியரின் ஒரே

தைப் புரியவைத்தது. அதிர்ச்சியும் கவலையும் அடைந்திருந்த எங்களுக்கும் எங்களது வயது காரணமாக எம்மால் ஆறுதல் கூறமுடியாதிருந்தது. ஆசிரியர் திருச்செல்வம் அவர்களுக்கு ஆறுதலாக இருந்தவர் நிமலராஜனின் தந்தையார் திரு. மயில்வாகனம் அவர்கள். மயில்வாகனம் அவர்கள் அப்போது முரசொலியின் அச்சகப் பிரிவுக்கு முகாமையாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார்.

பத்திரிகையின் ஆளுநர் நாயகம் நிமலராஜனின் தந்தையார் மயில்வாகனம் மூலம் எங்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடு

பட்டிருந்தார். பத்திரிகையின் ஆசிரியர் பீடப் பொறுப்பை ஏற்குமாறு இவர்களும் மற்றும் ஆசிரியபீட நண்பர்களும் என்னை வற்புறுத்தினர். அந்தச் சூழலில் எமக்கு ஒரு கடமை இருந்தது. நான் அந்த ஆசிரிய பீடத்தில் இறுதியாகச் சேர்ந்தவன். இந்திய இராணுவத்தின் காலத்தில் எமது நிறுவன வேலையாகச் சென்று தன்னுடைய கையை இழந்த பாரதி என்ற என்னுடைய நண்பனும் என்னுடன் அங்கு ஆசிரிய பீடத்தில் இருந்தார். தனக்குப் பின் அந்தப் பத்திரிகையில் அவருக்கு ஒரு எதிர்காலத்தைக் கொடுக்கவேண்டிய கடப்பாடு தமக்கு உண்டு என்று திருச்செல்வம் அவர்கள் என்னிடம் பல தடவைகள் சொல்லியிருந்தார். அதன்படி பாரதியை பேருக்காவது ஆசிரியர் பொறுப்பை ஏற்கும்படியும், நாங்கள் அதனை நடத்தித் தருகின்றோம் என்றும் நான் கேட்டுக்கொண்

பொறுப்பேற்றால் மட்டுமே தொடர்ந்து அங்கு பணிபுரிவேன் என்று பாரதியும் தெரிவித்தார். (இன்று அவர் கொழும்பில் பிரபல தமிழ்ப்பத்திரிகை ஒன்றின் பொறுப்பாசிரியராக உள்ளார்).

அந்த சூழ்நிலையில் ஒரு சிறிய வயதில் தினசரிப் பத்திரிகை ஒன்

பயப்படத் தேவையில்லை... என்னை நம்பி இவனை ஒப்படையுங்கள்'' என்றார். இறுதியாக வென்றது நிமலராஜனே. எப்படியோ எனது தாயாரின் சம்மதத்தைப் பெற்றுவிட்டார். என்னை அழைத்துக்கொண்டு எமது ஆளுநர் நாயகத்தின் இல்லத்திற்குச் சென்றார் நிமலராஜன்.

**... விரும்பத்தகாத இத்தகைய மரணங்களைத் தடுக்க, தவிர்க்கவேண்டுமாயின் ஊடகவியலாளர்கள் பொய்வேடம் களைந்து உளமார ஒன்றுசேர்வதும், நடுவு நிலை தவறாது உள்ளதை உள்ளவாறு மிகைப்படுத்தலின்றி உலகிற்கு எடுத்துக் கூறுவதும் காலத்தின் தேவையும், கடவுள் நீதியும் ஆகும்.**
**வலம்புரி ஆசிரியர் தலையங்கம்**
**22.10.2000**

றின் ஆசிரியப் பொறுப்பை அதுவும் யாழ்ப்பாணத்தில் ஏற்றுக்கொள்வது என்பதில் இருக்கும் அபாயத்தை உணர்ந்த நான் நழுவிய நீரில் தழுவிய மீனாகக் கழன்றேன். அப்போது ஈழநாடு பத்திரிகையின் நிர்வாக முகாமையாளராக இருந்த திருச்சிற்றம்பலம் அவர்கள் என்னை தம்முடைய ஈழநாடு பத்திரிகையில் வந்து பணிபுரியுமாறு கேட்டார். அவருக்கு சம்மதத்தைத் தெரிவித்துவிட்டு அவருடன் பேசிவிட்டு அவரின் ஈழநாடு காரியாலயத்தில் இருநது வெளியே வந்தபோது அங்கே வாசலில் நிமலராஜன் எனக்காகத் தன்னுடைய மோட்டார் சைக்கிளில் காத்திருந்தார்.

குற்ற உணர்வுடன் தலையைக் குனிந்து கொண்டேன் ''பேசாமல்

அங்கு அவரின் தந்தை மயில்வாகனமும் இருந்தார். எனது பொறுப்புக்களைப் பற்றி இருவரும் கூறினர்.

இறுதியாக நான் ஒரு விடயத்தைக் கூறினேன். நான் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வது என்றால், நிமலர்ராஜன் என்னுடன் இருக்க வேண்டும். அவர் வேறு பிரிவில் பணிபுரிந்தாலும் அவர் என்னுடன் நான் எங்கு சென்றாலும் கூட இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அப்போது இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த நேரம். பத்திரிகை ஆசிரியர் என்ற நிலையில் இந்திய இராணுவ முகாமிற்கும், ஸ்ரீலங்கா இராணுவ முகாமிற்கும் இந்திய இராணுவத்தினருடன் வெளிப்படையாக இயங்கிய இயக்கங்களின் முகாம்களுக்கும், இரக

**அன்புக்குரிய நிமால்!...**

**கொடூர யுத்தத்தால் முறிந்த**
**வடக்கு - தெற்கு பாலத்தை**
**மீண்டும் கட்டியவர் நீர்.**

**நீர், தமிழ் மக்களின் அழுகைக் குரலை**
**சிங்களத்தில் விளக்கமளித்தீர்**
**அதைக் கேட்டு நாங்களும் அழுதோம்**

**உன்னைக் கொலை செய்தாலும்**
**வடக்குடன் இணைந்த எம் உள்ளங்கள்**
**பிரிக்கமுடியாது**
**தலை வணங்கி நாம் உன்னை மதிப்போம்!**
**-ராவய நண்பர்கள்.**

ஏறு'' இது நிமல். சத்தம் போடாது மோட்டார் சைக்கிளில் அவரின் பின்னால் ஏறி அமர்ந்தேன்.நேரே எனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றார். எனது விதவைத் தாயாரிடம் நடந்ததைச் சொன்னார்.

''அம்மா இவனுக்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை இவன் புரிந்துகொள்ளவில்லை. இந்த வயதில் இப்படியொரு சந்தர்ப்பம் எவருக்கும எங்கும் கிடையாது. இதனை இவன் தட்டிக்கழிக்கப் பார்க்கிறான்'' என்றார். உடனே எனது தாயார் ''தம்பி என்னுடைய பிள்ளைகளில் எல்லோரும் வெளிநாடு போன நிலையில் இவன் மட்டும்தான் என்னுடன்

சியமாக இயங்கிய விடுதலைப் புலிகளின் இரகசிய சந்திப்பிடங்களுக்கும் கட்டாயம் செல்ல

***எஸ்.ஜே.பி.ரட்ணதுரை***

வேண்டிய ஒரு கடமை இருந்தது.

என்னுடைய கோரிக்கைக்கு எமது நிறுவனத்தின் ஆளுநர் நாயகம் சம்மதித்தார். என்னோடு சேர்ந்து நிமாலுக்கு வரக்கூடிய அபாயத்தைப் புரிந்துகொண்டும், தன்னுடைய மகனை என்னுடன் அனுப்ப நிமலராஜனின் தந்தையார் அனுமதித்தார். அன்றுமுதல் பத்திரிகையின பிரதம ஆசியர் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டாலும், அதனை பகிர்ந்துகொள்ள பாரதிபோன்ற சகாக்கள் பலர் என்னுடன் கூட இருந்தனர். ஆனால், என்னுடைய தனிப்பட்ட பொறுப்பை நிமால் மட்டுமே பொறுப்பேற்றார். உயிர்காப்பான் தோழன் என்பார்கள். அதற்கு உதாரணமாக இருந்தவர் நிமால். உயிர்காப்பான் தோழன் என்கின்ற தலைப்பில் கனேடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிமாலைப் பற்றி ஒருமணிநேர நிகழ்ச்சி வழங்கியிருந்தேன். அதனைக் கேட்ட பலர் அவரின் உயர் குணத்தைப் புரிந்தும், அப்படி ஒரு நண்பனைத் தெரிவுசெய்தமைக்கு எனக்குப் பாராட்டும் வழங்கியிருந்தனர். □

***அவர் வழங்கிய செய்தி தகவல்கள் ஆகியவை வடக்கு, கிழக்கு - விசேடமாக வடக்கை அடிப்படையாகக் கொண்ட மக்களின் வாழ்க்கை நிகழ்வுகள் ஆகியவை ஆகும். அவர் தம் கடமையைத் துணிச்சலாகச் செய்தார். சுயாதீனமாகச் செய்தார்.***
***- லங்காதீப சிங்கள தினசரியின் 2000.10.23 திகதி ஆசிரியர் தலையங்கத்திலிருந்து...***

ஆசிரியர் தன்னுடைய உயிரை இழக்கவேண்டிவரும். அத்துடன் ஆசிரியர் என்பவர் சகல சுமைகளையும தலையில் போட்டு நித்திரை முழித்திருக்க வேண்டும்.

இவ்வாறு பத்திரிகையிலே சகல பொறுப்புகளையும் அப்போது சுமந்த நிலையில் திருச்செல்வம் அவர்கள் ரயில் வண்டியின் எஞ்சினாக இருக்க, நாங்கள் அவரின் பின் ரயில் பெட்டியாக இணைந்திருந்தோம். ஒரு வேலைத்தளத்தில் வேலை செய்யும்போது வெளியிலே சத்தம் கேட்டால் ஓடிச்சென்று வேடிக்கை பார்க்க முடியாது. தொலைக்காட்சி பார்க்க முடியாது. பத்திரிகை, சஞ்சிகைகள் வாசிக்க முடியாது. ஆனால், ஒரு அலுவலகத்தில் இருந்து இவற்றைக் கட்டாயம் செய்யவேண்டும். அதுதான் பத்திரிகை அலுவலகம். இந்த வகையில் நான் அந்தப் பத்திரி

மகன் அகிலன் திருச்செல்வம் சுட்டுக்கொல்லப்பட்டார். எமது ஆசிரியரைக் கொல்லவந்தவர்களால் அவருக்குப் பதிலாக அவரின் மகன் கொல்லப்பட்டார். மகனின் பிரிவின் பின் உயிருக்கு அச்சுறுத்தலான நிலையில் திருச்செல்வம் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறவேண்டிய நிலையில் இருந்தார். அவர் கனடாவிற்குப் புலம்பெயர்ந்தார். அவரின் கீழ் பணிபுரிந்த நாங்கள் ஐவரும் ஆளுக்கொரு திக்கில் செல்ல முடிவெடுத்தோம். அதற்கு முன்னதாக முரசொலிப் பத்திரிகை இந்திய இராணுவத்தால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டபோது அந்தக் கட்டடம் மட்டுமே அதிர்ந்தது.

நிர்வாகத்தால் அதனை மீளக் கட்டியெழுப்ப முடிந்தது. ஆனால், அகிலனின் மரணம் அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்தது. பத்திரிகைத் தொழிலின் பயங்கரத்

**இமைக்கும் விழிக்கும் இடையில் இல்லை தூரம்**
**இருந்தாய் - அன்று இமையாய் என்னோரம்**
**இன்று குண்டு துளைக்கையிலே**
**கூடவே நானிருக்கவில்லை**
**மயங்கிச் சரிகையிலும் மார்போடு அணைக்கவில்லை**
**இயக்கம் குன்றையிலும் இறுதிவரை இருக்கவில்லை**
**இனியுன்னை காண்பதற்கு இப்புவியில் வழியுமில்லை**

டேன். பாரதியிடமும், பாரதியின் தந்தையாரிடமும் தமையனாரிடமும் இது குறித்துப் பேசினேன். ஆனால், பாரதியோ, அவரின் குடும்பத்தினரோ அதற்குச் சம்மதிக்கவில்லை. நான்

எனக்காக இருக்கிறான். இவனுக்கு ஒன்றென்றால் என்னால் முடியாது என்றார். ''இல்லை அம்மா எனக்கு ஒன்று நடந்ததன் பின் தான் இவனுக்கு ஒன்று நடக்கும் நீங்கள்

# இந்தியாவுடனான இரண்டு ஒப்பந்தங்களில் கைச்சாத்து


(கொழும்பு)

திருகோணமலை எண்ணெய்க் குதங்களின் களஞ்சியப் பாவனை சம்பந்தமான ஒப்பந்தம் ஒன்றிலும் உள்நாட்டுப் பெற்றோலியப் பொருள் கள் விநியோகம் சம்பந்தமான ஒப் பநதம் ஒன்றிலும் இந்தியப் பெற் றோலியக் கூட்டுத்தாபனம் கைச் சாத்திட்டுள்ளது.

அண்மையில் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் யஸ்வந் சிங்கவின் வருகையை அடுத்தே இவ் ஒப்பந்தங்கள கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இவ்விரு ஒப்பந்தங்களையும் கைச்சாத்திட்டதன் மூலம் திருகோணமலை எண்ணெய்க்குதங்களுக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் ஏற்படாது என இந்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (தி-60)

## நடந்தவர் முடங்கிவிட்டார்-இனி நடக்கப்போறவர்...?




ஜே.வி.பி- ஸ்ரீ.சு.க

# கூட்டணிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அழைப்பு


(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியுடனான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதம் ஒன்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவிற்கு நேற்று முன் தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.


அக்கடிதத்தில், மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான திகதிகளையும் ஏனைய விடயங்களையும் தொலைபேசிமூலம் அறிவிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை பதவியில் இருந்து விலக்குவதற்கு இம்மாதம் 24 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 16ஆம் திகதி வரை தீவிர எதிர்ப்புப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும அதில குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-61)



கவிஞர் ச. வே. ப வின் " கூலிக்கு வந்தவன "நாவல் வெளியீட்டு விழாவில் கலாநிதி எஸ். சிவலிங்கராசாவிடமிருந்து யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் வி.தயாபாலன் நூலின் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்கின்றார்.

செங்கையாழியான், கலைச்செல்வி ஆசிரியர் சிற்பி, உடுவில் கல்விப்பணிப்பாளர் எஸ். குபேரநாதன், நூலாசிரியர் பஞ்சாட்சரம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ் நிலை ஆசிரியர் செல்வி மீராவின் ஆக்கத்தில் உருவான "தமிழின்பம்" நூலினை கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதனிடம் நூலாசிரியரும், ஆசிரிய கல்வியியலாளர் கே.ஆர். கமலநாதனும் இணைந்து கையளிப்பதைக் காணலாம்.



தென்மராட்சிப் பகுதிக்கான 24 மணிரே மின்விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் எடுக்கப்பட படம் அமைச்சர் மகேஸ்வரன், மற்றும் பிரமுகர்கள் காணப்படுகின்றனர். (படம்:க.விஜியவாசன்)

# செய்தித் துளிகள்

## ச.ச.நிலைய திறப்புவிழா

(கைதடி)

நாவற்குழிச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட சனசமூக நிலையம் இன்று நண்பகல் 12.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.(உ-77)

## கிருக்யக்ஞ நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அமரர் பிரம்மஸ்ரீ மகாவித்துவான் ந.வீரமணி ஐயரின் கிருக்யக்ஞ நிகழ்வும், நினைவஞ்சலிக்கூட்டமும் இன்று மு.ப.11.00மணிக்கு இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோவிலடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. (உ-8)

## கலாத்தன் ஞாபகார்த்த படிப்பகம

(திருநெல்வேலி)

கடற்புலி மாவீரர் லெப் கேணல் கலாத்தனின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு யாழ். மருதங்கேணி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையில் எதிர்வரும் 21ஆம்திகதி படிப்பகம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

அவரது குடும்பத்தினரின் நிதி உதவியுடன் இப்படிப்பகம் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(உ-43)

## மீன் பிடிக்க அனுமதி மறுப்பு

(கைதடி)

கோதீவுப் பகுதியில் மீன் பிடிப்பதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்துள்ளதாக நாவற்குழி மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தைக் காரணம் காட்டி, மேற்படி கடற்பகுதிக்குள் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் மீன்பிடிக்க முடியாது என இராணுவத்தினர் தடைவிதித்து வருகின்றனர். (உ-77)

## வினைத்திறன் தடைகாண் பரீட்சை

(சுதுமலை)

சுகாதார போசாக்கு நலன்புரி அமைச்சின் கீழ் யாழ். மாவட்டத்தில் இயங்கும் வைத்தியசாலைகளில் கடமை புரியும் வைத்திய அதிகாரிகள் மற்றும் பல் வைத்திய அதிகாரிகள் ஆகியோருக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை இன்று காலை 9.00 மணிக்கு யாழ். போதனா வைத்தியாசாலையில் உள்ள தாதியர் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சை கடந்த மாதம் 21ஆம் திகதி நடாத்தப்படவிருந்து பின்னர் ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-252)

## தொண்டை அடைப்பான் தடுப்பூசி

(வடலியடைப்பு)

மாடுகளுக்கான தொண்டை அடைப்பான் நோய்க்கெதிரான தடுப்பூசி நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணிமுதல் பி.ப.10.00 மணிவரை மாதகல் கிழக்கு இளைஞர் படிப்பகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

மேற்படி பகுதியில் மாடுகளை வளர்ப்போர் அவற்றிக்கு இந்த தடுப்பூசியை தவறாது வழங்குமாறு சண்டிலிப்பாய் கால்நடை மருத்துவ அதிகாரி கேட்டுள்ளார். (உ-21)

## நடமாடும் மக்கள் வங்கிக் காரியாலயம்

(பொன்னாலை)

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி, வட்டுக்கோட்டை- சங்கரத்தைச் சந்தியில், நடமாடும் வங்கிக் காரியாலயமொன்றை சங்கானை மக்கள் வங்கிக்கிளை திறந்துள்ளது.

பிரதி செவ்வாய்க் கிழமை தோறும இயங்கிவரும் இந் நடமாடும் காரியாலயத்தில் சகலவிதமான கணக்குகளையும் ஆரம்பிக்க முடியுமெனத தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-49)

## கைக்குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா பண்டாரிக் குளம் பிரதேசத்தில் இனந்தெரியாத நபர்களினால் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட கைக்குண்டுத்தாக்குதலில் 4பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் இருவரே இத்தாக்குதலை மேற்கொண்டதாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்கள் அனைவரும் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (தி-61)

## சமுர்த்தி வங்கி சங்கம் அமைப்பு

(கந்தர்மடம்)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் சமுர்த்தி வங்கிச் சங்கமொன்றை அமைப்பதற்கான கட்டட வேலைகள் 11இலட்சம் ரூபா நிதி செலவில் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள காணியில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மேற்படி வங்கிக்கான கட்டடப் பணிகள் அப்பகுதி சமுர்த்திச் செயலணியின் தீவிர முயற்சியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-112)

## சட்டவிரோத மின் பாவனை

(நவாலி)

கூழாவடிப் பகுதியில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், எது வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.(தி-102)

## வீரசிங்கம் ஞாபகார்த்த முத்திரை

(வட்டுக்கோட்டை)

கூட்டுறவாளர் அமரர் வீரசிங்கத்தின் ஞாபகார்த்தமாக முத்திரை வெளியிடக் கோருவதென வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் உள்ள ஐக்கிய நாணய சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அதனை அமுல்படுத்துவது தொடர்பில் கூட்டுறவுச் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் அருள்ராஜன் தெரிவித்துள்ளார். (உ-89)

## மலசலகூடம் அமைப்பு

(நாவற்குழி)

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் நிதியுதவியுடன் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் மலசல கூடம் அமைக்கப்பட்டுவருகிறது. (தி-7)

★ ★ ★

(சில்லாலை)

சாந்தை பண்டத்தரிப்பு ஜே/148, ஜே/149 கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக்குடியேறியுள்ள 6 அங்கத்தவர்களைக்கொண்ட 35 குடும்பங்களுக்கு மலசல கூடங்களை அமைக்க மூவிமெண்டோ நிறுவனம் நிதி மற்றும் பொருள் உதவிகளை வழங்கியுள்ள்து. (உ-58)

## கூட்டம்

(வடலியடைப்பு)

யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டம் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் எதிர்வரும் 30ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. (உ-21)

## துர்நாற்றம்

(சில்லாலை)

பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து சில்லாலைக்குச் செல்லும் வீதியில உள்ள கழிவுநீர் வாய்க்கால் சுத்தம் செய்யப்படாது நீர் தேங்கியுள்ள நிலையில் துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் அவ்வீதியால் செல்லும் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (உ-58)

# வாஜ்பாயின் சமாதான முயற்சிகளுக்கு பாகிஸ்தான் அதிபர் முஷாரப் பாராட்டு

(புதுடில்லி)

ஜம்மு - காஷ்மீர் முதலமைச்சர் முஹ்தி மொஹமட் சயீத்தின்



வீட்டின் மீது நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தின் ஒரு முக்கிய அங்கம் என துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் ஸ்ரீ நகரில் உள்ள காஷ்மீர் முதலமைச்சரின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 3 பாதுகாப்புப் படையினர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் இடம்பெற்ற சமயம் முதலமைச்சர் அவரது வீட்டில் இல்லாத காரணத்தினால் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

இத்தாக்குதல் நடந்து சிலமணி நேரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அத்வானி மேற்குறித்த குற்றச்சாட்டைத் தெரிவித்துள்ளார்.


பாகிஸ்தான் தனது பயங்கரவாதப் போக்கிலிருந்து இன்னும் மாறவில்லை. இந் நடவடிக்கையினைப் பாகிஸ்தானின் ஆதரவு இயக்கமான லக்ஷறி ஈதொய்பா தீவிரவாத அமைப்பின் நிழலாகச் செயற்படும் அல்-மன்சூரியன் அமைப்பே நடத்தியுள்ளது என அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, இத்தாக்குதல் ஜம்மு - காஷ்மீரில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான நடவடிக்கைகளைக் குழப்பும் செயல் என முதலமைச்சர் முக்தி மொஹமட் சயீப் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு அரசு அஞ்சாது எனவும், தொடர்ந்தும் சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயை சமாதானத்தின் மனிதன் என பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் புகழ்ந்துள்ளார்.

இஸ்லாமிய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக மலேசியா சென்றுள்ள முஷாரப் அங்கு ரொய்ட்டருக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றின் போதே இவ்வாறு வாஜ்பாயைப் புகழ்ந்துள்ளார். அத்துடன், இந்தியாவுடன் சமாதானத்தை



ஏற்படுத்தவே தாம் விரும்புவதாகவும், பிரதமர் வாஜ்பாய்க்குப் பின்னால் இருந்து செயற்பட்டுவரும் சில சக்திகள் பாகிஸ்தானுடன் இந்தியா சாமாதானத்தை ஏற்படுத்துவதை விரும்பாமல் குழப்பி வருவதாகவும் முஷாரப் கூறியுள்ளார்.(உ-2)

## அமெரிக்கப் பொலிஸார் ஈராக்கில் பலி

(பக்தாத்)

ஈராக்கின் கர்பாலா நகருக்கு அண்மையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் 4 அமெரிக்கப் பொலிஸார் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இத் தாக்குதல் சம்பவத்துடன் ஈராக்கில் உயிரிழந்த அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கை 101 ஆக அதிகரித்துள்ளது.

இவ்வாறான தாக்குதல்களை சதாம் ஹுசைனின் ஆதரவாளர்களே மேற்கொண்டு வருவதாக அமெரிக்கத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து அமெரிக்கர்கள் அப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டுள்ளதுடன், தேடுதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-2)

உலக தரிசனம்



இந்தியா வந்துள்ள தென்னாபிரிக்க அதிபர் தபோ எம்பெகி மற்றும் அவரது மனைவி ஜெனெல் எம்பெகி ஆகியோர் புதுடில்லியில் உள்ள மகாதமா காந்தியின் நினைவிடததில் மலர்வளையம் வைதது அஞ்சலி செலுததியபோது...

# விஸ்வ ஹிந்துப் பரிசத் தலைவர் விமான நிலையத்தில் வைத்துக் கைது

(சென்னை)

விஸ்வ ஹிந்துப் பரிசத்தின் தலைவர் பிரவீன் ரொகாடியோ நேற்றுக் காலை லக்னோ விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அயோத்தியில் இன்று நடைபெறவுள்ள புதிய சங்கற்பம் என்ற பேரணியில் கலந்துகொள்ளச் சென்ற சமயமே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் இப் பேரணியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவாரா என்பது குறித்து உத்தரப் பிரதேச அரசே முடிவு செய்யும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, விஸ்வ ஹிந்துப் பரிசத் நேற்று முன்தினம் நடத்திய பேரணயில் உத்தரப் பிரதேச காவல் துறையினர் 25 ஆயிரம் பேரைக் கைது செய்திருந்தனர்.

சர்ச்சைக்குரிய இராமர் கோயிலைத் தரிசிக்கச் செல்லும் பக்தர்களை அனுமதிக்கப் போவதில்லை என உத்தரப்பிரதேச முதலமைச்சர் கூறியதை அடுத்தே இப்பேரணிகள் இடம்பெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (உ-2)

# படைகளை ஈராக் அனுப்ப தென்கொரியா தீர்மானம்

(சியோல்)

அமெரிக்கா கேட்டுக் கொண்டதற்கு இணங்க மேலதிக படைகளை ஈராக்கிற்கு அனுப்ப தென்கொரியா தீர்மானித்துள்ளது.

கடந்த மாதம் அமெரிக்காவின் வேண்டுகோளுக்கு இணங்க 5 ஆயிரம் படைகளை தென்கொரியா ஈராக்கிற்கு அனுப்பிவைத்துள்ளது.

எனினும், மேலதிக படைகளைத் தந்துதவுமாறு அமெரிக்கா மீண்டும் கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்போது மேலதிகப் படைகளை அங்கு அனுப்பிவைக்க தென்கொரியா தீர்மானித்துள்ளது.

சமாதானத்தை நிலைநாட்டவும் அதன் இறைமையைக் காக்கவுமே தமது படைகளை ஈராக் கிற்கு அனுப்ப தீர்மானித்ததாக தென்கொரிய அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-2)

## பாதுகாப்புச் சபையில் பிரான்ஸ் இந்தியாவை ஆதரிக்கும்


(பரிஸ்)

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடாக இந்தியா வர விரும்புவதை பிரான்ஸ் ஆதரிப்பதாக அதிபர் ஜெக்ஸ் சிராக் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச மட்டத்தில் இந்தியா ஒரு பெரும் பங்களிப்புச் செய்யக் கூடிய நிலையில் இருக்கின்றது என்பதில் நான் திருப்தியடைகின்றேன்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்ற வகையிலும், இந்தியா அந்தத் தகுதியைப் பெறுகின்றது என்று சிராக் கூறியுள்ளார்.

பிராங்கோ இந்தியன் முன் முனைப்பு அமைப்புக் கூட்டத்தில் இது தொடர்பாக அவர் உரை நிகழ்த்தினார். (பி)



மலேசியாவின் புத்திரஜாயா நகரில் இடம்பெற்றுவரும் முஸ்லிம் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு வருகைதந்த இந்தோனேசியத் தலைவர் மேகவதி சுவர்ணோ புத்திரிக்கு மலேசியப் பிரதமர் மகதீர் முகமட் கைலாகு கொடுத்து வரவேற்பதையும், அவர் அருகில் அவரது மனைவி சிற்தி ஹர்மா உடன் நிற்பதையும் காணலாம்.



தாய்லாந்து பாரம்பரிய நடனத்தில் அணிந்து கொள்ளும் முகமூடிகளுக்கு இறுதி வடிவம் கொடுக்கிறார் இளம் கலைஞர் சோரபாங் பாங்சுக். பாங்கொக்கில் நடைபெறும் ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் தலைவர்களுக்கு இந்த முகமூடிகள் பரிசாக அளிக்கப்படவுள்ளது.

# மக்கள் எதிர்ப்பின் எதிரொலி பொலிவிய ஜனாதிபதி இராஜினாமா

(லாபாஸ்)

பொலிவியா ஜனாதிபதி லொசாடா தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

இவர் தனது இராஜினாமாக் கடிதத்தினை உரிய இடத்திற்கு நேற்றுமுன்தினம் அனுப்பிவைத்துள்ளார் எனத் பொலிவிய சிரேஷ்ட அதிகாரிகளை மேற்கோள்காட்டி ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

பொலிவியாவில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களே இவரது பதவி விலகலுக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் லொசாடாவின் எதிர்ப்பாளர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை அவருக்கு எதிராக நடத்தியிருந்தனர்.

இதனைத் தடுக்க முயன்ற பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தை மேற்கொண்டபோதிலும், ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து செல்லவில்லை.

ஜனாதிபதி லொசாடாவும் அவரது சகாக்களும் அமெரிக்காவுக்கு இயற்கை வாயுவை விற்பதை உடன் நிறுத்தினால் மட்டுமே ஆர்ப்பாட்டங்கள் கைவிடப்படுமெனவும் ஜனாதிபதி லொசாடா பதவிவிலக வேண்டுமெனவும் வலியுறுத்தி இருந்தனர்.

இதனால் விசனமடைந்த ஜனாதிபதி லொசாடா ஆர்ப்பாட்டக்காரர்கள் பயங்கரவாதிகள் நாத்திகர்கள் என்று விமர்சித்திருந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், தனது பதவிக்காலமான 2007 -ஜுலை வரை தான் பதவி விலகப் போவதில்லை எனவும் திட்வட்டமாகத் கூறியிருந்தார்.

இந் நிலையில் லொசாடா திடீரெனத் தனது பதவியை இராஜினாமாச் செய்வதாக அறிவித்துள்ளார். இதனையடுத்து பொலிவியாவின் புதிய ஜனாதிபதியாக அந்நாட்டின் உதவி ஜனாதிபதி காலோஸ் மெஸா பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். இதனையடுத்து, இந்த மாற்றம் பொலிவிய ஆர்ப்பாட்டக்காரர்களைப் பெரிதும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருப்பதுடன், அவர்கள் இச் செய்தியை கேட்டதும் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டார்கள் எனவும் ரொய்ட்டர் செய்தி மேலும் தெரிவித்துள்ளது. (உ-2)

## இன்று ஒரு தகவல்

# இங்கிதம்!

ஒரு ஆசிரியர் தனது மாணவர்களை சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்றார். பலஇடங்களையும் பார்த்த பின் அவர்கள் ஒரு பூங்காவிற்குள் நுழைந்தனர். பூங்காவில் பல இடங்களிலும் "பூக்களைப் பறிக்காதீர்கள்" என்று எழுதி வைத்திருந்தார்கள். ஒரு மாணவன் அங்குமிங்கும் பார்த்துவிட்டுச் சடார் என்று ஒரு செடியைப்பிடுங்கி விட்டான். ஆசிரியர் பார்த்துவிட்டார் "பார்த்தாயா! பூக்களைப் பறிக்காதீர்கள் என்று எழுதிப்போட்டிருக்கும்போது நீ செடியைப் பறித்துவிட்டாயே!" என்றார். அதற்கு அந்த மாணவன் கூறினானாம் "சார் பூக்களைப் பறிக்காதீர்கள் என்றுதான் எழுதியிருச் ன்றது. செடியைப் பிடுங்கக் கூடாது என்று போடவில்லையே" என்றானாம்.

இது போன்ற மனோபாவம் நம்மில் பலரிடம் உள்ளது. அதாவது பூக்களைப் பறிக்காதீர்கள் என்று எழுதியிருந்தால் பூக்களைத்தான் பறிப்போம். புல் தரையில் நடக்காதீர்கள் என்றிருந்தால் புல்தரையில்தான் தேய்த்துக் கொண்டு நடப்போம். பொய் பேசாதீர்கள் என்றால் பொய்மை அதிகமாகப் பேசுவதற்குப் பழகிக்கொள்வோம். என்ன காரியத்தை எந்த இடத்தில் செய்யக்கூடாது என்று எழுதியிருந்தாலும் அந்த இடத்தில் அவற்றைச் செய்து காட்டுவதில் நமக்கு ஒரு தனி ஆனந்தம். குப்பையை இங்கே கொட்டவும் என்று எழுதியிருந்தால் வேறு ஓர் இடத்தில் கொண்டு போய் கொட்டுவோம். இப்படியே எதிர்மறையாகச் செயற்பட்டு நமக்குப் பழகிப்போய்விட்டது.

இதனை மாற்றுவதற்கு என்ன வழி செய்யலாம் என்று மனோதத்துவ நிபுணர்கள் யோசனை செய்து கொண்டிருக்கின்றனராம். யோசித்துப்பார்த்தால் அந்த வாசகங்களைக் கொஞ்சம் மாற்றி எழுதினால் பொறுப்புணர்ச்சி வருவதற்கான வாய்ப்பிருப்பதாகக் கூறுகின்றனர். புல் தரையில் நடக்காதீர்கள் எனும் வாக்கியத்திற்குப் பதிலாக அதனையே சிறிது இங்கிதமாக மாற்றியமைத்தால் நன்றாக இருக்கும் என்கின்றார்கள். அந்த வாக்கியம் இப்படியும் இருக்கலாம். "பூங்காவில் உள்ள இந்தப் புல் தரை உங்களுக்கென்றே சொந்தமானது. இதனைப் பராமரிப்பது உங்கள் கடமை அல்லவா?" என்று எழுதிப் போட்டால் அதனைப் படிப்பவர்கள் சிறிது யோசிப்பார்கள். அந்த யோசனையிலேயே இப்படி நடப்பது தவறு என்று அவர்கள் உணர்ந்து கொள்ள வாய்ப்பிருக்கின்றது என்று கூறுகின்றனர். இவற்றையும் தாண்டி மிதித்துக்கொண்டு செல்பவர்கள் இருக்கின்றார்கள் என்று வையுங்கள். இருந்தாலும் ஒரு சிறு மன மாற்றத்தையாவது ஏற்படுத்தலாம் அல்லவா?

அதேபோல் சில வீடுகளில் நாய்கள் ஜாக்கிரதை என்று அறிவிப்புப் பலகை எழுதிப்போட்டிருப்பார்கள் .இது எவ்வளவு ஒரு கொடூரமான வார்த்தை பாருங்கள். நாய்கள் ஜாக்கிரதை என்று எழுதிப்போடுவதற்குப் பதிலாக வேறு மாதிரியும் எழுதிப்போடலாம். அதாவது வேடிக்கையாக ஒரு விடயத்தைக் கூறுவார்கள். ஒரு வீட்டில் "நாய்கள் ஜாக்கிரதை" என்று எழுதிப்போட்டிருந்ததாம். அந்த வீட்டில் உள்ள மருமகளிடம் சிலர் சென்று கேட்டிருக்கின்றார்கள் இப்படி. "உங்கள் வீட்டில்தான் நாயே இல்லையே ஏன் இப்படி எழுதிப் போட்டிருக்கின்றீர்கள்?" என்று கேட்டனர். அதற்கு அந்த மருமகள் பதில் சொன்னாராம் "எங்கள் மாமியார் இருக்கிறாரே அதுதான்"

இதுபோன்ற உணர்ச்சிகள் எல்லாம் மனித குரோதங்கள். இதனால்தான் இந்த வாக்கியங்களை அப்படியே மாற்றியமைக்க வேண்டும் என்று அவர்கள் கூறுவார்கள். "எங்கள் வீட்டில் நாய்கள் இருக்கின்றன" என்பதை தெரியப்படுத்துவதற்கு ஒருவேளை அது கடித்தாலும் கடித்து விடும். எச்சரிக்கையாக வாருங்கள் என்பதற்கு "எங்கள் வீட்டில் கடி நாய் உள்ளது . கவனமாக உள்ளே வரவும்" என்று எழுதிப்போடலாம் அல்லவா? இப்படி எழுதிப்போடும் மனோபாவத்திலேயே நிச்சயமாக வருபவர்களுக்கு ஒரு மனமாற்றம் ஏற்பட்டுவிடும்.

இங்கிதம் இருக்கும் இடத்தில் தான் இன்முகம் இருக்கும். இன்முகம் இருக்கும் இடத்தில் தான் பாசமும் நேசமும் இருக்கும். பூவினை நாடித்தானே வண்டுகள் வரும். எலியை நாடி வருவதில்லையே. அதனால் நாம் பூவாகவே இருக்கலாம். அடுத்து "இல்லை" என்று கூறுவது சிலருக்கு பழக்கமானது. ஒருத்தர் உணவு விடுதி ஒன்றிற்குச் சென்றார். "போண்டா இருக்கின்றதா?" என்று கேட்டார். அங்கு போண்டா இல்லை. ஆனாலும் அந்தப் பணியாள் அதனை எப்படிச் சமாளித்தார் என்றால் "ஐயா! ஒரு பத்துநிமிடங்கள் காத்திருக்க முடியுமா? நான் சூடாக உங்களுக்குப் போண்டா தருகின்றேன்!" என்றார். இவருக்கோ சந்தோஷம் . இல்லை என்பதையே எதிராக மாற்றி விட்டார் பாருங்கள் அந்த மனோபாவம் வேண்டும். ஆனால் சில இடங்களில் அப்படி இல்லை.

ஒரு உணவு விடுதிக்குச் சென்றார் ஒருவர். "இட்லி இருக்கின்றா?" என்றார். "இட்லி இருக்கின்றது சட்னி இல்லை" என்றார் பணியாள். "சரி ! தோசை இருக்கின்றதா?" என்றார் "தோசை இருக்கின்றது சாம்பார் இல்லை" என்றார் பணியாள். "சரி ! பூரி இருக்கின்றதா?" என்றார். "பூரி இருக்கின்றது கிழங்கு இல்லை" என்றார் பணியாள். "எதுவுமே இல்லை என்று கூறுகின்றீர்களே பின் ஏன் உணவு விடுதி நடத்துகினறீர்கள்? பூட்டிவிட்டுச் செல்ல வேண்டியது தானே!" என்றார் இவர் கோபத்துடன். "பூட்டிவிட்டுச் செல்லலாம் பூட்டு உண்டு .ஆனால் சாவிஇல்லை" என்றார் பணியாள்.

**இளசை எஸ் .சுந்தரம்**

# யாழ்.மாவட்டச் செயலகத்தில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் நடமாடும் சேவை, எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 2ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமை வரையான 3 தினங்கள் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நடமாடும் சேவையில் கொழும்பு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் காமினி எஸ். செனரத் தலைமையில் மேலதிக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர், பிரதம கணக்காளர், தலைமை அலுவலக உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் மற்றும் 12 மோட்டார் வாகனப் பரிசோதகர்கள் உட்பட 26 பேர் அடங்கிய குழு பங்குபற்றவுள்ளது.

மேற்படி நடமாடும் சேவையில் ஆற்றப்படவுள்ள சேவைகள் வருமாறு:

★ ஆவணங்கள் தொலைந்தமையால் இதுவரை பதிவு செய்யப்படாத வாகனங்களை பதிவு செய்தல். இதன் நிமித்தம் உரிமையாளர் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் கீழ்வருமாறு:

i ஆவணங்கள் தொலைந்தமையையும், வாகனம் பற்றிய விபரங்களையும் உறுதிப்படுத்தும் கிராம அலுவலர் ஊடான பிரதேச செயலரின் கடிதம் (ஆங்கிலத்தில்)

ii அதேபோன்று ஆவணங்கள் தொலைந்தமையையும், வாகனம் பற்றிய விபரங்களையும் உறுதிப்படுத்தும் சமாதான நீதவானின் கடிதம் (ஆங்கிலத்தில்)

மேற்படி கடிதங்களில் வாகன வகை, இயந்திர, அடிச்சட்ட இலக்கங்கள், வாகனநிறம், வாங்கிய திகதி, வாங்கிய நிறுவனத்தின் பெயர் (தெரிந்திருப்பின்), ஆவணங்கள் தொலைந்த காரணம், இதுவரை பதிவு செய்யாமைக்கான காரணம் போன்றன தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

iii கிராம அலுவலரால் உறுதிப்படுத்திய இரண்டு கறுப்பு வெள்ளை புகைப்படம்.

iv கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு(வலுவில் உள்ளது)/சாரதி அனுமதிப்பத்திரம்/தபால் அறிமுக அட்டை (வலுவில் உள்ளது) ஏதாவது ஒன்றின் தெளிவான பிரதியும் அதன் மூலப் பிரதியும.

V அத்துடன் உரிமையாளர் நேரில் வாகனத்துடன் சமுகமளிக்க வேண்டும.

★ ஆவணங்கள் தொலைந்தமையால் இதுவரை உடமை மாற்றம் செய்யப்படாத வாகனங்களை உடமை மாற்றம் செய்தல். இவ் விடயம் தொடர்பாக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் கீழ்வருமாறு:

i ஆவணங்கள் தொலைந்தமையையும், வாகனங்கள் பற்றிய விபரங்களையும், முன்னைய பதிவு செய்யப்பட்ட உரிமையாளரின் விபரங்கள் தெரிந்திருப்பின் அது பற்றியும் உறுதிப்படுத்தும் கிராம அலுவலர் ஊடான பிரதேச செயலரின் கடிதம் (ஆங்கிலத்தில்)

ii மேற்கூறியது போன்று சகல விபரங்களையும் உள்ளடக்கிய சமாதான நீதவானின் கடிதம் (ஆங்கிலத்தில்)

மேற்படி கடிதங்களில் வாகன வகை, இயந்திர இல, அடிச்சட்ட இலக்கம், வாகன நிறம், வாங்கிய திகதி (உடமை மாற்றத்திகதி), முன்னைய பதிவு செய்த உரிமையாளர் பெயர், முகவரி, ஆவணங்கள் தொலைந்த காரணம், பதிவு செய்யாமைக்கான காரணம் போன்றன தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

iii கிராம அலுவலரால் உறுதிப்படுததிய இரண்டு கறுப்பு வெள்ளை புகைப்படம்.

iv கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு (வலுவில் உள்ளது)/சாரதி அனுமதிப்பத்திரம்/தபால் அறிமுக அட்டை (வலுவில் உள்ளது) ஏதாவது ஒன்றின் தெளிவான பிரதியும் அதன் மூலப்பிரதியும்.

V அத்துடன் உரிமையாளர் நேரில் வாகனத்துடன் சமுகமளிக்க வேண்டும்.

★இதுவரை எம்மிடம் சமர்ப் பிக்கப்பட்ட,புதிய சாரதி அனுமதி பத்திரங்களைப் பெறுவதன் நிமித்தமான வண்ணப்பதாரிகளுக்கு எழுத்து மற்றும் செயல்முறை பரீட்சையை நடாத்துதல்-விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை திகதியை உறுதிப்படுத்தி கடிதங்கள் .அனுப்பப்பட்டுள்ளன. கடிதம கிடைக்காதவர்கள் உடன் யாழ. மோ. போ. திணைக்களத்துடன தொடர்பு கொள்ளவும்.

★ சாரதி அனுமதிப்பத்திர பரீட்சையயில் சித்தியடைந்து தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்று ஒரு வருடமாகியும் நிரந்தர சாரதி அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் தமது முறையீடுகளை கொழும்பு மோ.போ. ஆணையாளருக்கு எழுத்து மூலம்(ஆங்கிலத்தில்) சமர்ப்பிக்க முடியும். அதே போன்று சாரதி இணைப்பிரதி, சாரதி அனுமதிப்புத்தகங்களை அட்டைகளாக மாற்றுதல், சாரதி அனுமதி அட்டைகளை புதுப்பித்தல் போன்றவற்றுக்கு விண்ணப்பம் செய்தும் இன்றுவரை சாரதி அனுமதிப்பத்திர அட்டை கிடைக்காதவர்கள் தமது முறையீடுகளை கொழும்பு மோ. போ. ஆணையாளருக்கு சமர்ப்பிக்க முடியும்.

குறிப்பு:- பூர்த்தி செய்யப்பட்ட ஒரு தொகுதி சாரதி அனுமதி அட்டைகளும், தபால் மூலம் அனுப்பி திருப்பிச் சென்ற ஒரு தொகுதி சாரதி அனுமதி அட்டைகளும் பதிவுச்சான்றிதழ்களும் எடுத்து வரப்படுவதால் விண்ணப்பதாரிகள் தங்களது ஆவணங்கள் எடுத்து வரப்பட்டிருப்பின் நேரில் அவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

★ புதியவாகனப்பதிவு, உடமை மாற்றம், பதிவுச் சான்றிதழின் நகல் பிரதி மற்றும் பதிவுச் சான்றிதழில் திருத்தம் செய்தல் போன்றவற்றுக்கு விண்ணப்பம் செய்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் இன்றுவரை கிடைககப்பெறாதவர்களும் தமது முறையீடுகளை கொழும்பு மோ. போ.ஆணையாளருக்கு எழுத்து மூலம் (ஆங்கிலத்தில்) சமர்ப்பிக்க முடியும்.

★ சாரதி அனுமதிப்பத்திரம் பெற விரும்பும் அங்கவீனர்களும் தமது கோரிக்கைகளை நடமாடும் சேவையில் முன்வைக்கலாம்.

★ சக்தி அற்றோர் உபயோகிக்கின்ற இதுவரை பதிவு செய்யாத வாகனங்களுக்குரிய உரிமையாளர்களும் தமது கோரிக்கைகளை நடமாடும் சேவையில் முன்வைக்கலாம்.

★ வேறு எந்த மோ. போ. திணைக்கள செயற்பாடுகள் பற்றியும் தங்களது பிரச்சினைகளை நடமாடும் சேவையில் முன் வைக்கலாம். (உ-7)

## இராசி பலன்

**19. 10. 2003**

**(ஐப்பசி 2, ஞாயிறு)**

நவமி - பி.இ. 2.45 வரை

பூசம் - மு.இ. 8.54 வரை

இராகுகாலம் - 4.32 - 6.02

சுபநேரம் - 9.02 - 10.32

**மேடம்**
மனஞ்சஞ்சலம், அதிக பிரயாசை, எடுத்த காரியம் தாமதமாகும், பணவிரயம்.

**இடபம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், நற்கீர்த்தி, தெய்வ தரிசனம், சகோதரர் உதவி.

**மிதுனம்**
கடுமையான வார்த்தை, காரிய தாமதம், வீண் செலவு, போசனசுகக்குறைவு.

**கடகம்**
கௌரவம், தெய்வசிந்தை, முயற்சி பலிதம், போசன சுகம்.

**சிங்கம்**
உறவினர் மனஸ்தாபம், பிறருக்கு உதவுதல், காரிய அலைச்சல், பிரயாணம்.

**கன்னி**
குடும்பநலன், விருந்துபசாரம், காரிய சித்தி, நண்பர்கள் சந்திப்பு.

**துலாம்**
பிறருக்கு உதவுதல், நல்ல முயற்சி, சிந்தனை மிகுதி, மேன்மை.

**விருச்சிகம்**
உடல் நலக்குறைவு, திடீர்பயணம், அமைதிக்குறைவு, காரிய தாமதம்.

**தனுசு**
உறவினர் மனஸ்தாபம், முயற்சி தடங்கல், சரீரபீடை, போசனசுகம்.

**மகரம்**
களஸ்திர நன்மை, நல்ல வரவேற்பு, காரிய சித்தி, உற்சாகம்.

**கும்பம்**
சுவாரஸ்யம், புதிய திட்டமிடல், அதிகாரம் கலந்துரையாடல்.

**மீனம்**
தாழ்ந்த சுபாவம்,எந்தக்காரியத்திலும் புத்திரால் கவலை, சிறு வியாதி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# மீன் சந்தையின்றி மூளாய் மீனவர்கள் மிகுந்த கஷ்டம்

(பொன்னாலை)

மூளாய்ப் பகுதியில் வசித்து வரும் மீனவக்குடும்பங்கள், தாம் பிடித்துவரும் கடல் உணவுகளைச் சந்தைப்படுத்த ஏற்றதொரு சந்தை வசதியின்றி மிகுந்த சிரமப்பட்டு வருகின்றன.

பொன்னாலையில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் உட்பட மூளாயில் பெருமளவு கடற்றொழில் செய்யும குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவர்களால் பிடிக்கப்படும் கடல் உணவுகளைச் சந்தைப்படுத்த ஏற்ற வழியில்லாத நிலையில், தனியாருக்குச் சொந்தமான நிலப் பரப்பைச் சந்தையாகப் பாவித்து வருகின்றனர்.

இங்கு கொட்டகைகள் எதுவும் இல்லாத காரணத்தினால் விற்பனையில் ஈடுபடுபவர்களும், கொள்வனவுக்குச் செல்வோரும் மழை மற்றும் வெய்யிலுக்கு ஈடுகொடுக்கச் சிரமப்பட்டு வருகின்றனர்,

இதேவேளை,பருவமழை ஆரம்பமாகவுள்ள இந்நிலையில் இனி வரும் நாட்களில் இச் சந்தை செயலிழக்கும் நிலை ஏற்படலாம் என அஞ்சப்படுவதோடு, தாம் பிடிக்கும் மீன்களை சந்தைப்படுத்தும் வகையறியாது இப்பகுதி மீனவக் குடும்பங்கள கவலை வெளியிட்டுள்ளன.

(உ-49)

# மத்துகமப் பிரதேசத்தில் புதிய விமான நிலையம்

(கொழும்பு)

மத்துகம பலேகொடப் பிரதேசத்தில் சுமார் 500 ஹெக்ரேயர் நிலப் பரப்பில் 710 கோடி ரூபா செலவில் விமான நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான செயல் திட்ட அறிக்கையினை விமான நிலைய, விமானப் போக்குவரத்து சேவைகள் அதிகார சபையின் தலைவர் தொழில் வேலைவாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்கவிடம் நேற்று முன்தினம் கையளித்தார்.

இவ் அறிக்கையினை சிவில் விமான நிலைய அதிகார சபையும், இலங்கை முதலீட்டுச் சபையும், நகர அபிவிருத்திச் சபையும் கூட்டாக இணைந்து தயாரித்துள்ளன.

விமானப்படை வீரர்கள் பயிற்சி பெறுவதற்கு ஏற்ற வகையில் இவ் விமான நிலையம் அமைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.(தி-61)

*ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்*
*தெய்வத் தோடொப்பக் கொளல்.*
*– குறள்*

வலம்புரி

## நடைமுறைப்படுத்தினால் நல்ல முடிவு...

வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால சபைக்குரிய திட்டவரைபை விடுதலைப் புலிகள் தயாரித்தாகி விட்டது.

அயர்லாந்தில் கூடிய விடுதலைப் புலிகளின் சட்ட வல்லுநர்களும், சர்வதேச சட்ட வல்லுநர்களும் இடைக்கால சபைக்கான திட்ட வரைபிற்கு இறுதி வடிவம் கொடுத்துள்ளனர்.

இத்திட்ட வரைபு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பரிசீலனையின் பின்னர் இலங்கை அரசிடம் கையளிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே இடைக்கால நிர்வாக சபைக்கான திட்ட வரைபை அரசு சமர்ப்பித்துள்ளது. அதற்கு மாற்றீடாகவே விடுதலைப் புலிகள் தாம் எதிர்பார்க்கின்ற அதிகாரங்கள், அபிலாஷைகளை உள்ளடக்கியதாக இத்திட்ட வரைபை தயாரித்துள்ளனர்.

இத்திட்ட வரைபு இலங்கை அரசு சமர்ப்பித்த திட்ட வரைபை விடக் கூடிய அதிகாரங்களைக் கொண்டிருப்பதால், இதற்கு மாற்றீடாக அரசு இன்னுமோர் திட்ட வரைபைத் தயாரிக்குமா? என்ற கேள்வி பலரிடமும் ஏற்பட்டிருந்தது.

இக்கேள்விக்கு அமைச்சர் பீரிஸின் அறிவிப்பு தகுந்த பதிலாக அமைந்துள்ளது. அதாவது, விடுதலைப் புலிகளால் அரசுக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள திட்ட வரைபிற்கு மாற்றீடாக அரசு எதனையும் முன்வைக்காது மாறாக அரசும் விடுதலைப் புலிகளும் தனித்தனியே தயாரித்த திட்ட வரைபில் உள்ள வேறுபாடுகள்-முரண்பாடுகள் சமாதானப்பேச்சுக்கள் மூலம் தீர்க்கப்படும்.

அமைச்சர் பீரிஸின் மேற்போந்த கருத்து அரசு இன்னுமோர் இடைக்கால சபைத் திட்ட வரைபைத் தயாரிக்காது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. இதேவேளை சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்ளும் விடயத்தில் அரசு சில உறுதி மொழிகளை முஸ்லிம் தலைவர்களுக்கு வழங்கியிருப்பது, சமாதானப் பேச்சுக்கள் தொடர்வதற்கான சாத்தியக் கூறுகளை குறைத்துள்ளதென்றே கூறவேண்டும்.

விடுதலைப் புலிகளின் திட்ட வரைபு அரசுக்குக் கிடைக்க முன்னர் முஸ்லிம்கள் தனித்தரப்பாக சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்கான உடன்பாட்டை ஒருதலைப்பட்சமாக அரசு வழங்கியிருப்பது, அரசின் அவசரத்தன்மையைக் காட்டினாலும் அரசும் விடுதலைப் புலிகளும் தமக்குள் பேசி இடைக்கால சபைத் திட்ட வரைபை முடிவு செய்வதும், முஸ்லிம்களின் விடயத்தைக் கையாள்வதும் சமாதானப் பேச்சுக்கள் சுமுகமாக நடைபெறுவதற்கும், நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கும் ஏதுவாக அமையும்.

# பிறரது தேவையறிந்து சேவை செய்தால் இயேசுவின் அருளை இலகுவில் பெறலாம்

தொடர்பாடல் ஊடகங்களின் பயன்பாடு அதிகரித்துக் காணப்படும் இக்காலத்திலே செய்திகள் இலகுவாகப் பரிமாறப்படுவதையும், அவற்றின் பலன்களையும் அனுபவிக்கின்றோம். செய்திகளிலும் நல்ல



செய்திகளை விட நன்றல்லாத செய்திகள் மிகவிரைவாக மூலை முடுக்கெல்லாம் பரவிவிடுவதையும் அவதானிக்கின்றோம். இவ்வுலகிலே நிலையான ஓர் புகழைத் தேடிக் கொள்ள, நிலையான ஓர் அந்தஸ்தில் இருந்து கொள்ள மனிதன் பலவாறும் முயற்சிகளை மேற்கொண்டு பல திறமைகளை வளர்த்து வெற்றி காண்கின்றான். ஆனாலும் அவன் ஒன்றை அடிக்கடி மறந்துவிடுகின்றான். நாம் வாழும் இவ்வுலகு நிரந்தரமானதல்ல என்பது அவனுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகின்றது. நிரந்தரமற்றது என்பதை எண்ணத் தொடங்கினால் அவனால் இவ்வுலகிலே வாழ்வது கடினமானதாகும். எனவே நிரந்தர இருப்பிடத்தில் செய்யப்படுவது போன்று அல்லும் பகலும் அயராது பாடுபட்டு சொத்துக்களைச் சேர்த்துவைத்து யாருக்கும் சொல்லாமலே உயிர் உடலை விட்டுச் சென்றுவிடுவதை நாம் காணுகின்றோம்.

### இயேசுவே எமது நற்போதகர்

இயேசு போதித்துக் கொண்டிருந்த காலத்தில் அவரிடம் ஒருவன் வந்து ''நல்ல போதகரே நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று அவரைக் கேட்டான். இயேசு மறுமொழியாக ''கட்டளைகளைக் கடைப்பிடிக்கும்படி கூறினார். அவனோ இவற்றையெல்லாம் நான் சிறுவயதில் இருந்தே கடைப்பிடிக்கிறேன் என்றான். இயேசு அவனிடம் உமக்கு உள்ளதெல்லாம் விற்று ஏழைகளுக்கு கொடும் பின்னர் வந்து என்னைப் பின்பற்றும் என்றார். அவனோ மிகவும் முகவாட்டத்துடன் சென்றான். ஏனெனில் அவனிடம் ஏராளமான சொத்து இருந்தது என்று மாற்கு நற்செய்தி 10ஆம் அதிகாரத்தில் காண்கின்றோம். எம்மிடம் உள்ளவைகளைப் பிறரோடு பகிர்ந்து கொள்ள, பிறருக்குத் தர்மம் கொடுக்க, உதவிசெய்ய எமக்கு மனமில்லை. ஆனால் எனக்கு ஒருகுறையும் இறைவன் வைக்கவில்லை என்று பெருமை அடிக்கின்றோம். காற்றுப் போனால் எம் உடல் நாற்றம் எடுக்கும். காரணம் பல கூறுகின்றோம். ஊழியம் செய்தவனுக்கு உணவு கொடுக்க மறுத்து உள்ள கட்டடங்களை உடைத்து களஞ்சியங்களைப் பெரிதாக்கி நிலைவாழ்வை இவ்வுலகிலே பெற்றுக் கொள்ள நப்பாசை கொள்ளுகின்றோம்.

### நற்செயலே வாழ்வளிக்கும்

எது நல்லது என்று தெரியாமல் நாம் செய்வதெல்லாம் நல்லது என்று தப்புக்கணக்கு போடுகின்றோம். ஆண்டவர் அழகான ஆழமான வார்த்தைகளால் சொல்லியிருக்கிறார். '' நீ எந்த அளவையால் அளக்கின்றாயோ அதே அளவையாலே உனக்கு அளக்கப்படும்'' எம்முடைய அளவையைக் கொண்டே எமக்கான நன்மை தீமைகள் தரப்படும். உலகத்தின் செல்வங்கள் முடிந்தநிலையில் ஆண்டவரே, ஆண்டவரே என்று நாம் கூப்பிட்டுப் பயன் ஒன்றுமில்லை. நற்போதகரே என்று கூறமுடிந்த அந்த மனிதனுக்கு நற்செயல் செய்ய மனமில்லாமல் போனது. ''சின்னச்சிறிய சோதரர்களுக்குச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்'' என்று இயேசு கூறுகின்றார்.

## பரமபிதா காட்டிய பாதை

எனவேதாம் கடவுளுக்கு நேரடியாக எதையும் செய்ய முடியாது. சக மனிதனுக்கு செய்யும் செயலே எம்மைத் தீர்ப்புக்குள்ளாக்கும். அன்னை தெரேசாவைப் பாருங்கள். இன்று அவள் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளாள். புனித வாழ்வையே அந்த அன்னை இவ்வுலகில் வாழ்ந்தாள். அதனாலே இறைவன் அவரைத் தனது புனித தோழமைக்கு அழைத்துள்ளான்.

### அன்னை தெரேசாவை ஆதாரமாக்குவோம்

தேவை அறிந்து செய்வதே சேவையாகும். அன்னைதெரேசாள் தேவை அறிந்து சேவை செய்தார். அவரின் சேவையின் பலனே மிகக்குறுகிய காலத்தில் தெரேசாள், புனித அன்னை தெரேசாளாகத் திருச்சபையால் உயர்த்தப்பட்டு வணக்கத்துக்குரியவளாகின்றாள். எதை நாங்கள் விதைக்கின்றோமோ அதனையே அறுப்போம். எள்ளை விதைத்து நெல்லை அறுவடை செய்ய முடியாது. எனவே நாங்கள் செய்கின்ற நற்செயல்களே, பிறரன்புச் செயல்களே இறைவனை முகம் முகமாக நிலைவாழ்வில் தரிசிக்க எமக்குத் தகுதியைப் பெற்றுத்தருவதாகும். இந்த உலகிலே செல்வச் செருக்கிலே வாழ்ந்தவன் இறந்து நரகத்திலே இருக்கும் போது அச் செல்வந்தனின் தாழ்வாரத்தில் ஏழையாகக் கிடந்த இலாசர் மோட்சத்திலே தந்தை ஆபிரகாமின் மடியில் வீற்றிருப்பதை நரகத்தில் இருந்த செல்வந்தன் காணும்போதே தான் இவ்வுலகில் செய்த பாவப்பழிகளை உணர்ந்தான். தான் செய்யாமல்விட்ட நன்மைகளை நினைத்தான். ஆனால் அவனுக்கு ஒரு பலனும் கிடைக்கவில்லை . நற்செயல்களைப் பேசுவதல்ல நற்செயல் செய்யக் கற்றுக்கொள்வோம்.இறையருளைப் பெற்றுக்கொள்வோம்.□

**அருள் செல்வராஜன்**

## தீபாவளி தினக் கொண்டாட்டம் கதிரேசன் மண்டபத்திற்கு மாற்றம்

(கொழும்பு)

இந்துசமய விவகார அமைச்சு இம்முறை தேசிய வைபவமாக நடத்தவுள்ள தீபாவளி தினக் கொண்டாட்டம், எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.3.00 மணி முதல் இரவு 11.00 மணிவரை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்ச்சியில், தமிழகத்தின் பிரபல வயலின் இசை மேதையான குன்னக்குடி வைத்தியநாதன் தமது குழுவினருடன் கலந்து கொண்டு வயலின் இசைக்கச்சேரி நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன், தீபாவளி தினத்தின் சிறப்பை விளக்குமுகமாக தபால் திணைக்களம் அச்சிட்டுள்ள விசேட தீபாவளி தின முத்திரையை அன்றைய தினம், மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரினால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

மேலும், இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் செய்திமடலான ''சிவன் ஒளி'' எனும் இதழும் அன்றைய தினம் வெளியிடப்படவுள்ளதுடன்,

கொழும்பு மாவட்ட ஆலயங்களைச் சேர்ந்த பிரதம சிவாச்சாரியப் பெருமக்களுக்கு வஸ்திரதானம் வழங்கும் நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இம்முறை தீபாவளி தினக் கொண்டாட்டத்தை காலிமுகத்திடலில் மிகவும் சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தபோதும், தவிர்க்க இயலாத காரணங்களால், நிகழ்ச்சி நடைபெறும் இடம் கதிரேசன் மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (உ)

## விழிப்புலனற்றோர் சங்க ஏற்பாட்டில் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம்

(யாழ்ப்பாணம்)

விழிப்புலனற்றோர் சங்கமும் யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகங்களும் இணைந்து நடாத்திய சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வு நேற்று யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெற்று.

யாழ்.மாவட்ட விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ஆர். சிவகுமரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கொழும்பு விழிப்புலனற்றோர் சங்க சம்மேளனத்-தலைவர் சட்டவாளர் விமல் விக்கிரமசிங்க, செயலாளர் குணசேன, கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் த.சாம்சன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

விமல் விக்கிரமசிங்க அங்கு உரையாற்றுகையில்,

நாம் இருக்கின்ற இடங்கள் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் நமக்குள்ள பிரச்சினைகள் ஒன்றாகவே காணப்படுகின்றன. இவ்வாறான நிகழ்வுகள் எமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வழியேற்படுத்தும்.

ஒரு மனிதனுக்கு கண் எவ்வளவு தூரம் முக்கியமானதோ, அதே அளவு முக்கியம் வாய்ந்ததாக கண் பார்வை இல்லாதவனுக்கு வெள்ளைப் பிரம்பும் அமைகின்றது என்றார். (உ-7)

## தர்ம இல்லங்களில் தங்கியிருப்போர்க்கு தீபாவளி தினத்தன்று புத்தாடை விநியோகம்

### *இந்து கலாசார அமைச்சு 15 இலட்சம் ஒதுக்கீடு*

(கொழும்பு)

தீபாவளி தினத்தன்று புத்தாடைகளை விநியோகிப்பதற்கென இந்து கலாசார அமைச்சு 15 இலட்ச ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள 35இற்கும் மேற்பட்ட அநாதைச் சிறுவர் இல்லங்கள், மகளிர் இல்லங்கள் என்பவற்றில் உள்ள வயோதிபர்கள் சிறுவர்கள், மகளிர் ஆகியோர்க்கே இவ்வாறு புத்தாடைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த வகையில், யாழ். மாவட்டத்திற்கு 4இலட்சத்து 85 ஆயிரத்து 500, மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 2இலட்சத்து 51 ஆயிரம், அம்பாறை மாவட்டத்திற்கு 1 இலட்சத்து17 ஆயிரம், திருகோணமலை மாவட்டத்திற்கு 2இலட்சத்து 35 ஆயிரம், வவுனியா மாவட்டத்திற்கு 79 ஆயிரம், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 2இலட்சத்து 78 ஆயிரத்து 500 என்ற அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்திலும் மறுநாள் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலிலும், அதற்கடுத்த நாள் துர்க்கா மணி மண்டபத்திலும் இந்து கலாசார அமைச்சு ஏற்பாட்டில் தீபாவளி நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.(உ)

## திசைசரி தியானம்

### தாமதம் ஆபத்து

உடலாகிய கூட்டை அல்லது அழியக்கூடிய உடலை எறிந்துவிடும் முன் ஒருவர் இறைவனை உணரும் நிலையை அடைந்து விட்டாரானால் அவர் சம்சார பந்தத்திலிருந்து விடுதலை பெற்றவராவார். பிரம்மனைப்பற்றிய ஞானத்தின் மூலமாக அவர் பிறப்பு இறப்பு எனப்படும் வலையிலிருந்து விடுவிக்கப்படுகிறார். அவரால் இதை உணர முடியாவிட்டால் ஆன்மாவை அறியும் ஞானம் இன்மையால் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்க வேண்டியிருக்கும். தாமதம் ஆபத்தானது. அழியக்கூடிய உடல் வீழும் முன்னர் அழிவற்ற நிலையான சுயம்பிரகாசமான இறைவனை அறிய உண்மையான முயற்சி செய்யவேண்டும்.

**சுவாமி சிவானந்தர்**

## சேதமடைந்த பொதுக் கட்டடங்களின் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகள் மற்றும் நகரசபைகள் ஆகியவற்றின் கீழ் செயற்பட்டு வரும் அமைப்புக்களின் செயற்பாடுகளைத் தனக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் மற்றும் முன்பள்ளிகள் ஆகியவற்றின் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வது தொடர்பான விபரங்கள் உட்பட வீதி புனரமைப்பு மற்றும் சந்தைகளின் புனரமைப்பு போன்ற விபரங்களை அனுப்பிவைக்குமாறு சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த கால யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்து இதுவரை காலமும் புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ள பொதுக் கட்டடங்களின் விபரங்கள், அவற்றை மீள நிர்மாணிப்பதற்கு தேவையான நிதி மற்றும் முன்னுரிமைத் தேவை ஆகியவற்றின் விபரங்களையும் அதற்கான உத்தேச செலவு மதிப்பீட்டு அறிக்கையையும் தனக்கு விரைவில் அனுப்பிவைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(உ-252)

யாழ்ப்பாணம்.

# சுதேச வைத்திய நிபுணர்கள் மருத்துவ சேவை முகாமை யாழ்ப்பாணத்தில் நடத்துவர்

(யாழ்ப்பாணம்)

கொரிய நாட்டு சுதேச வைத்திய நிபுணர்கள், யாழ்.குடாநாட்டில் இலவச மருத்துவ சேவை முகாம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 4-ம் திகதி முதல் 7-ம் திகதி வரையான நான்கு தினங்கள் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை கைதடி சித்த போதனா வைத்திய சாலையில் இம் மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது.

இம் மருத்துவ சேவையை வழங்குவதற்கு 15 வைத்திய நிபுணர்களும அவர்களது உதவியாளர்களும் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர். மேற்படி மருத்துவ முகாமில் வாதரோகம், பாரிசவாதம், இடுப்புவலி, மூட்டு வலி, முள்ளந்தண்டு, கழுத்து, கைமூட்டு வலி, தலைவலி, சுவாச ரோகம், இரத்த அமுக்கம், சர்ம ரோகம் மற்றும் ஏனைய ரோக நோய்களுக்கும் சிகிச்சை வழங்கப்படவுள்ளது.

இச் சிகிச்சையை வழங்கவுள்ள மருத்துவக் குழுவின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கடந்த வெள்ளிக்கிழமை யாழ். செயலகத்தில், அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், யாழ். மேலதிக அரச அதிபர் பத்தினியம்மா திலகநாயகம் போல், கைதடிப் போதனா வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி திருமதி வி.கைலாசபதி, பொரளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலை மருத்துவ உத்தியோகத்தர் திருமதி விக்னவேணி செல்வநாதன், பேராசிரியர் சு.பவானி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை மேற்படி மருத்துவ முகாமில் சிகிச்சை பெறவேண்டியுள்ள நோயாளர்கள் ஆயுர்வேத வைத்திய சாலைகளில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த)

## இடைக்கால...

பற்றியும், தலைவர் தீவிரமாகப் பரிசீலிப்பதாக தெரியவருகிறது.

திட்டவரைபுக் கையளிப்பின் போது, ஸ்கண்டிநேவிய நாடுகளுடனான சந்திப்புக் குறித்தும் தமிழ்ச்செல்வன் தலைவரிடம் எடுத்துக் கூறினார்.

நட்பு ரீதியாக இடம்பெற்ற சந்திப்புக்கள், திட்ட வரைபு ஆராய்வுகள் தொடர்பாகவும் அவர் மேலும் கூறியதாக தெரியவருகிறது.

இதேவேளை இம்மாத இறுதிக்குள் திட்ட வரைபை அரசாங்கத்திடம் கையளிப்பதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாகவும் வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திட்ட வரைபு நோர்வேத் தூதுவர் ஊடாக அரசிடம் கையளிக்கப்படும்.

இது இவ்வாறிருக்க புலிகளின் திட்ட வரைபுக்கு அரசாங்கம் பதில் வரைவு தரமாட்டாதெனவும், அதற்கு பதிலாக திட்ட வரைபு குறித்து பேச்சு வார்த்தையே ஆரம்பிக்கப்படுமென்றும், அரசியல் விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ)

## சமாதான...

களில் அரசுக்கு கிடைக்கும் என்றும், இறுதி அரசியல் தீர்வு 2000ஆம் ஆண்டின் அரசியல் சட்ட வரைபை தழுவியதாகவே அமையும் என்றும் பிரதமர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

அத்துடன் புலிகளின் பதில் எதுவாக இருப்பினும் அதற்கு அரசு மாற்று யோசனைகளை முன்வைக்காது என்றும், இரு தரப்பினரும் மேற்கொண்டு நடாத்தும் கலந்துரையாடல்களின் மூலமே இரு தரப்பினரதும் யோசனைகளுக்கிடையிலான இடைவெளி தீர்க்கப்படும் என்றும் தெரிவித்தார். இன்று இடம்பெறப் போகும் பிரதமரின் இந்திய விஜயம் பற்றியும் ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால் இரு தலைவர்களுக்குமிடையே இடம் பெற்ற பேச்சுக்களில் முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லையென்று ஜனாதிபதி அலுவலகம் கடந்த வியாழனன்று தெரிவித்திருந்தது.

(ந-6)

## எமது வரைபை...

வரைபை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்தாலேயே சமாதானப்பேச்சுக்களில் கலந்து கொள்வோம்.

சமாதானப் பேச்சுக்களில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளுமே ஈடுபடுவர். இங்கு முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாக கலந்து கொள்ள முடியாது.

எமது இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபில் முஸ்லிம் மக்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக அவர்களின் அதிகாரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ் விடயம் குறித்து முஸ்லிம்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகள் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டுமென்று நோர்வே அரசிடம் கோரிக்கை விடுத்திருக்கிறோம். ஏனெனில் புலம் பெயர்ந்து வாழும் எமது மக்களை நாம் சந்தித்து கலந்துரையாடி வருகிறோம். அந்த வகையில் அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியாவில் வாழும் எமது மக்களையும் நாம் சந்தித்து பேச வேண்டியவர்களாக உள்ளோம். அதற்கு அந் நாடுகளில் எம் மீது விதிக்கப்பட்ட தடை இடையூறாக உள்ளது. எனவே அந் நாடுகள் எம் மீதான தடையை நீக்க வேண்டுமென்று கருணா மேலும் தெரிவித்தார்.

(இ)

## ஜனாதிபதியின்...

சமுகம்தருவர்.நாட்டில் தற்போது அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவு, மற்றும் தவறான முறையில் நடத்தப்படுகின்ற சமாதானச் செயற்பாடுகள் என்பனவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இக் கூட்டம் நடைபெற இருக்கின்றது. அடுத்த வெள்ளிக்கிழமை கொழும்பில் ஆரம்பமாகும் எதிர்ப்புக் கூட்டத்தைத் தொடர்ந்து நடைபெறவுள்ள பல எதிர்ப்புக் கூட்டங்களின் கடைசி நிகழ்வாகவே இக் கூட்டம் இடம் பெறும். இதே போல்எதிர்ப்புக் கூட்டங்கள் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நடைபெறும். இக்கூட்டங்களில் கலந்து கொள்ளவருமாறு ஜே.வி.பி.யை ஸ்ரீ.சு.கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால ஸ்ரீசேன அழைத்துள்ளார் என்றும் இதற்கு ஜே.வி.பியினர் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்றும் மங்கள சமரவீர அச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

(ந-06)

## களுவாஞ்சிக்குடியில் பூரண ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடியில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையம் ஒன்றில் பணிபுரியும் நபர் ஒருவரை விசேட அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் தாக்கியதைக் கண்டித்தே நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

(த)

## சிறுவர்கள் ஒப்படைப்பு

(அம்பாறை)

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைய முன்வந்த 18வயதிற்கும் குறைந்த ஏழு சிறுவர்கள் அம்பாறை அக்கரைப்பற்றில் வைத்து அவர்களது பெற்றோரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டனர்.

யுனிசெவ் நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்டப் பிரதிநிதி முன்னிலையில் சிறுவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

(த)

## மத்தியஸ்தர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான முக்கிய கூட்டம் ஒன்று இன்று மாலை 4.00 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது இக்கூட்டத்தில் அனைத்து மத்தியஸ்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் ந.ரவீந்திரா கேட்டுள்ளார்.

(த)


CALTEX

கல்டெக்ஸ் வீதியோரக் கண்காட்சி

இதோ, எஞ்ஜின் ஓயில்கள், பிறேக் ஓயில்கள் முதலியன பற்றி அறிந்து கொள்ள உங்களுக்குச் சிறந்ததோர் வாய்ப்பு. கல்டெக்ஸ் நிபுணர்கள் பின்வரும் திகதிகளில் உங்களைத் தேடி வருவார்கள்:

- ஒக்டோபர் 20- நெல்லியடி, பருத்தித்துறை
- ஒக்டோபர் 21- சுன்னாகம், திருநெல்வேலி
- ஒக்டோபர் 22- யாழ்.நகர்

உங்கள் வாகனத்தின் பிறேக் ஓயில் நிலமையை அவ்விடத்திலேயே பரிசோதிக்கலாம்


நீங்கள் கல்டெக்ஸ் பொருட்களை வாங்கினால் மகத்தான பரிசுகளை வெல்லும் வாய்ப்பும் கிடைக்கும்.
மேலதிக விபரங்களுக்கு சக்தி எப்.எம் வானொலியைக் கேளுங்கள் அல்லது (021) 2226147 என்ற உடனடித் தொலைபேசி இலக்கத்தில் எமது வாடிக்கையாளர் சேவைப் பிரிவுடன் தொடர்புகொள்ளுங்கள்.

இந்த அரிய வாய்ப்பை தவறவிடாதீர்கள்!

(சி-6754)


உன் மூன்றாம் ஆண்டு நினைவுடன் நாம்.......

மௌன மொழியில் கண்ணீர் மொழிபெயர்ப்பு



கனவுகளில் முகம் புதைத்து
கழியும் வாழ்வில்
களம் கண்டு
வரலாறு படைத்திட்டாய்

உலகிற்கே நீ செய்தி
தந்து கொண்டு இருந்த போது
கேட்டுக் கொண்டிருந்த
உலகு
நீயே செய்தியான போது
அதிர்ந்து போனது

உனக்கு தெரிந்த
மூன்று மொழிகள்
அதிர்ந்து-
மௌனித்திருந்த போது
உலக மொழிகள்
உன் பெயரை
உச்சரித்துக் கொண்டிருந்தது!

வரலாறு மனிதர்களை
பதிவு செய்வதில்லை
நீயே வரலாறானாய்

இருள் சூழ்ந்த யாழில்
பொருள் பொதித்த
வெளிச்சம் நீயே!

அதற்கு முன்நாள்வரை
உன் குரலில் செய்தி தந்த
பி.பி.சி... அன்று...
உன்னையே செய்தியாய்த் தந்தது

எந்தத் தந்தைக்கும்
தன் மகனுக்கு அஞ்சலி
எழுதும் நிலை வரக்கூடாது
அந்தப் பேற்றையும் எனக்கருளிய
பெறாமகனானாய்!

"சித்தப்பா" என்னும் குரல்
இப்போதும் கேட்பதுண்டு
ஆனாலும் சித்தா! என்னும்
உன் குரல் எப்போது கேட்பேன்
இனி.......

(அண்மையில் அமரரான சித்தப்பா)
**கணபதி கணேசன்**
செம்பருத்தி – மலேசியா

**மயில்வாகனம் நிமலராஜன்**
**1961.06.05 - 2000.10.19**

-குடும்பத்தினர்

(சி-6755)


MEDICAL CHECK UP

வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.